தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1	சென்னை	11—12—1954	சனிக்கிழமை	இதழ் 24

கனிந்த தமிழ் நடைக் கல்கி ....!

'கல்கி' என்னும் புனைப் பெயர் கொண்ட தோழர் ரா. கிருஷ்ண மூர்த்தி, 5-12-54 அன்று காலை, தனது இல்லத்தில் இயற்கை எய்தி னார் என்கிற செய்தி கேட்டுப் பெரி தும் வருந்துகிறோம். கட்சி-இனப் பாகுபாடற்று 'எழுத்தாளர் சாதி' என்கிற கண்ணோட்டத்தோடு பார்க் கும்போது, ஒரு நல்ல எழுத்தாளர் மறைந்தார் என்கிற துக்கம் நமக்கு மேலிடுகிறது.

அவர் தம் கூடாரம் எதுவாயி னும், அவர் தம் கொள்கை எத் தகையதாயினும் அவரது எழுத் துக்களிலே ஒரு 'தனித் தன்மை' இருந்ததை யாரும் மறுக்க முடி யாது. தமிழ் வசன நடையில் அவர் கைக்கொண்ட முறை அவருக்கே உரியது. தமிழும் வசன நடையும் என்றொரு ஆராய்ச்சி செய்து 'ஆரம்பகாலம் முதல்' என்று வரிசை போடுவோமானால், உரை ...சிரியர்களின் வசன நடையும், ...தற்கு வெகு நாட்களுக்குப்பிறகு ...ந்த, பாரதியின் வசன நடையும், ...வருன கொள்கையில் வெகு ...லம் வாழ்ந்த, வ. வெ. சு. ஐய ...ன் உரை நடையும் காலங்களுக் ...ற்ப மாறி வந்திருப்பதைக் ...ண்போம். பேச்சு நடையில் நயத் ...தாடு எழுதிய பாரதியும், அதை ...டிச் சிறிது அலங்காரம் செய்து ...காண்ட வ. வெ. சு. ஐயரும் தங் ...ள் காலத்தில் தனித் தன்மை ...பற்று விளங்கினார்கள். அதற்குப் ...றகு வந்த எழுத்தாளர்கள் பல ...ம் தங்களுக்கென புதுப்பாணி ...குத்துக்கொண்டார்களாயினும் ...வர்கள் அத்தனை பேர் நடையி ...ம் ஒன்றை ஒட்டி ஒன்று-ஒரே நடு ...ழையிலிருந்து பிரிந்த கிளைகள் ...லத் தோன்றினவோ என்கிற ...க்கமே மேலிடுகிறது. கலப்பற்ற ...த்தன்மை கொண்ட எழுத் ...ளர்கள் விரல்விட்டு எண்ணக் ...டிய அளவிலேயே இருந்திருக் ...ர்கள் ; இருக்கிறார்கள். பத்து ...த்தாளர்களின் எழுத்துக்களை ...த்தமாக எடுத்து வைத்துக் கொண்டு ஒற்றுமை வேற்றுமை களைக் கணக்கிட்டால் ஒற்றுமையே அதிகம் நிற்கிறது. இது தவறல்ல ஆயினும் தனித்தன்மை கிடை யாது. அப்படித் தனித்தன்மை கொண்ட எழுத்தாளர்களில் கல்கி யும் ஒருவர். சொல்லவருங் கருத்தை தெளிவோடு புது முறை யில் சொன்னார் கல்கி.

அடிகள் மறைமலையார் தனித் தமிழில் வாக்கியங் கட்டினார் ; அதிலே நயமுங் காட்டினார்-அது அவரது 'தனித்தன்மை'யாக நிற் கிறது.

பெரியார் திரு. வி. க., தனித் தமிழில் கட்டுச்செட்டாக வாக்கியங் கட்டினார். படிக்கிறவன் மனத்துக் குள் - கருத்துமட்டுமல்ல - வாக்கிய மும் குதித்து விழும்படி எழுதினார்- அது அவரது தனித்தன்மை.

அறிஞர் அண்ணா அவர்கள் வினைச் சொல்லை முன் வைத்து, நறுக்குத்தெறித்தது போன்ற வார்த்தைகளுக்குள் கருத்தை முழுமைபெறச் செய்து, அதிலும் ஓர் தெளிவைக் காட்டினார் ;—உண் மையைச் சொன்னால், புரட்சியே செய்தார் ! அதன்றியும், பெருங் கருத்தையே கூறிவிடும், புது-சிறு- வார்த்தைகளையும் உற்பத்தி செய்து கொண்டார்-அது அவரது 'தனித் தன்மை'.

எல்லாப் பகுதிகளிலும் பிரகா சிக்க முடியாதவராய் ஆனால், முழுக்க முழுக்கத் 'தனித்தன்மை' கொண்ட பாணியை உடையவராய் இன்னுமொரு எழுத்தாளர் இருக் கிறார். அவர் பெயர் தி. ஜ. ரங்க நாதன். கண்டிப்பான விமர்சக ரான ரங்கநாதனின் தமிழ் நடை- சிறிது வட மொழிக் கலப்புடன் இயங்கினாலும்-நீரோட்டம் போன்ற நடை. உண்மையில் 'தனித் தன்மை' கொண்டதுதான் அதுவும்.

மறைந்த பெரியார் வ. ரா. வின் நடை, பேச்சு நடையின் நேரடிப் படம். இது 'தனித்தன்மை கொண்டது என்பதை எல்லோரும் ஒப்புவர்.

இவற்றை இங்கு கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம் இவர்களோடு தனக்கென ஒரு நடைகொண்டு எழுதியவர் 'கல்கி' என்பதால்தான். அவரது மறைவு கேட்டதும், அவர் எழுதிய நடை முடிந்துவிட்டதே என்கிற கவலை தான், எழுத்தாளனாகிய எனக்கு ஏற்பட்டது. அவரது கருத்துக்கள் பல நமக்கு ஏலா தவை-முரண்பட்டவை. ஆயினும் அவர் நல்ல எழுத்தாளர்.

அவரது அரசியல் விமர்சனங்கள் பல, பலருக்கும் பிடிக்காதவை- ஆயினும் அவர் உறுதியான விமர்ச கர்.

அவரது எழுத்தின் போக்கும் நோக்கமும் திடீர் திடீரென்று தலைகீழாக மாறியதுண்டு-ஆயினும் அது, அவர் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றிய ஒருவருக்காக நடந்தது.

அவரது நகைச்சுவை நல்லவற் றையும் எள்ளி நகைத்திருக்கிறது- ஆயினும் அவர் தலைசிறந்த நகைச் சுவையாளர் ; பகைவரையும் சிரிக்க வைத்தவர்.

தனக்குச் சரி என்றுபட்டதை எடுத்து வீசும் திராணி அவருக்கு மிக அதிகம். அறிஞர் அண்ணா அவர்களை, அவர் பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர் என்றெல்லாம் பாராட்டி எழுதியபோது, "ஏன் திடீரென்று தலையில் தூக்கி வைத்துக்கொள்கிறீர்கள் !" என்று அவரைச் சிலர் கேட்டனராம். அதற்கு அவர், "அழகாக இருப்ப தால் தூக்கிவைத்துக்கொள் கிறேன்-அவலட்சணத்தையா வைத்துக்கொள்கிறேன் ? கங்கை அழகாக இருப்பதால், சிவபிரான் தலையில் வைத்துக்கொண்டான் ; குரூபியாயிருந்திருந்தால் காலி லல்லவோ வைத்திருப்பான் !" என்று சிரித்துக்கொண்டே சொன் னாராம். இது அவரது நெருங்கிய நண்பரே என்னிடம் சொன்னது. அதற்குப்பிறகும் ஒரு படத்தைப் பற்றி விமரிசனம் எழுதிய கல்கி, "அண்ணாத்துரையும் அவரது சீடர் களும் தமிழை அழகழகாகக் கையாளுகிறார்கள்" என்று எழுதி யுள்ளார்.

இன்னொன்று ; தொடர் கதைக் காக பத்திரிகை விற்பனை அதிக மாகும் என்கிற நிலையை ஏற்படுத் தியவர் கல்கிதான்.

சுருங்கச்சொன்னால், கல்கியின் மறைவு எழுத்தாளர் உலகிற்கு நஷ்டம்தான். அதுவும், ஒரு குறிப் பிட்ட வட்டாரத்திற்கு அது ஈடு செய்யமுடியாத நஷ்டம். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதா பத்தைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

★

எழுத்தாளர் 'கல்கி' புத்த மங்கலத்தில் 1899-ம் ஆண்டு பிறந் தார். 'இன்டர்' வரை படித் தார். இந்தியத்துணை கண் டத்தின் விடுதலைக்காக உழைத் தார். மும்முறை அடக்குமுறைக்கு ஆளாகிச் சிறை புகுந்தார். 'மகுட பதி' என்ற,இவர் எழுதிய நாவல் ஓரளவு 'கல்கியின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாய் அமைந்துள்ளது.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. விடம் 'கல்கி' அவர்கள் சிலகாலம் பயிற்சி பெற்றார். 1940-ம் ஆண் டில் கல்கியை ஆரம்பித்தார். தனக்கென ஒரு தனி நடையைப் பின்பற்றி எளிய தமிழ் நடையில் எல்லோரும் புரிந்துகொள்ளும் முறையில் பல நாவல்கள் எழுதி யுள்ளார். 'அலை ஓசை' 'பார்த் திபன் கனவு' சிவகாமியின் சப தம் 'மாடத்தேவன் சுனை' 'மகுட பதி'. 'வீணைபவானி' 'பொன்னி யின் செல்வன்' முதலியன: 'அமர தாரா' அவரின் கடைசி முயற்சி. ஆனால் முற்றுப் பெறுவதற்குள் காலம் அவரை விழுங்கிவிட்டது.

...மாற்றான் தோட்டத்து மலராயினும் மணம் தந்த மலரே !

'பளிச்'சென்று எடுத்து வீசும் திராணி மிக்கவர் கல்கி !

எண்ணம்

கண்ணதாசன்

[எழுத்தாளர் 'கல்கி'யின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் எண்ணம் எழுதாது விடப்படுகிறது.]

அழகிரி மன்றம், இலவச இரவுபள்ளி நிதிக்காக

12—12—54 ஞாயிறு மாலை 6-மணிக்கு
திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில்
வனையாபதி நாடக மன்றத்தாரின்

" அந்தப்புரம் "

(நாடகம்)

கதை, வசனம்: எஸ். பி. நாதன்

நடிப்பவர்கள்:

G. முத்துகிருஷ்ணன், ரேவதி, **C. R.** ராஜகுமாரி, **M. K.** கோவிந்தராஜன், **S. S.** கதிரேசன், **S. R.** தசரதன், **K.** பங்காரு, **O. A. K.** தேவர், **A. N.** கிருஷ்ணன்.

கட்டணம் ரூ 1, அணா 8.

தினமணி கதிர் **2-7-50**

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறுவது.

" பாணிக் கிரகணம், ஓமம், தீவலம் வருதல், சப்தபதி முதலியன சங்க காலத்தில் நிகழ்ந்தன அல்ல. 'புரோகிதர்கள் மந்திரம் ஓதுதலும், மணவினையில் இல்லையென்றே கூறலாம். **தாலி கட்டும் சடங்கும் காணப்பட வில்லை.** சுமார் 6, 7-ம் நூற்றுண்டுகளில்தான் இவைகளில் பலவற்றையும் தமிழ்மக்கள் கைக்கொண்டனர். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து ஆதியில் ஆரியரின் கலப்பு மிகுதியாக இல்லாத காலத்தே, மணச்சடங்கு ஒரு சிலவே இருந்ததையும், பின்னர் அவர்களுடைய கூட்டுறவு தமிழ் நாட்டில் பெருகப் பெருக மணச் சடங்குகளும் பெருகி விட்டமையும் நன்கு புலப்படும்.

இலக்கியத்தில்

புகழ்!

சோழநாடு; எதனுலும் குறைவில்லாதது. வீரத்திற்கும், மாண்பிற்கும் ஏனைய பண்பிற்கும் குறைவற்றது. வாழ்க்கையின் கண்மிளிருகின்ற எண்ணற்ற இடையூறுகளுக்கும் காரணம், ஒரு நாட்டை ஆளுகின்றவர்களின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. அதுபோலவே தான் மக்களிடம்தோன்றும் ஒழுக்க வகைகளும். எதைஎடுத்துக்கொண்டாலும் நாட்டை ஆள்வோரைப் பொறுத்துத்தான் இருக்கிறது; அந்நாட்டிலுள்ள மக்கள் சிறப்பும். ஆகவே சோழ நாட்டு மக்கள், அந்நாட்டை ஆளுகின்ற நலங்கிள்ளியைப் போலவே குணத்தாலும் மனத்தாலும் சிறந்து விளங்குகின்றனர்.

அத்தகைய சிறப்புற்ற நாடு சோழநாடு. அந்நாட்டை, நலங்கிள்ளி ஆட்சி புரிகிறுன். அவனது கொலு மண்டபத்தில் பெரும்புலவர்களும், மறக்குடி மாவீரர்களும், ஏனையவர்களும் சூழ்ந்திருக்கின்றனர். அவனது திறமையைப் பற்றி வேற்று நாட்டுப் புலவர்கள் புகழ்ந்து, அவனுல் அளிக்கப் பெறும் பொருளைப் பெற்றுக் கொண்டு செல்கின்றனர். அவ்வேளையில் அவனது அவைக்களப் புலவரான முதுகண்ணன் சாத்தனுர், நலங்கிள்ளியின் புகழை என்னென்று புகழ்வதென்றறியாமல், அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறுர்.

புலவர் ஏதோ மாறுபட்ட முகத்துடன் தோன்றுவதைக் கண்ணுற்ற நலங்கிள்ளி, "புலவர் பெருமானே! தங்களின் முகத்தில் என்றுமில்லாத ஒரு தனி வியப்புத் தோன்றுகிறதே, காரணமென்ன?" என்று நயந்து கேட்கிறுர்.

அதற்குப் புலவர், "பெருமைக்குரிய மன்னு! உங்களை அனைவரும் புகழ்கின்றனர்; அவர்களுக்கெல்லாம் நீங்கள் வேண்டிய பொருளைக் கொடுக்கிறீர்கள். நானே, தங்களின் புகழை என்னென்று புகழத் தெரியாமல் விழிக்கிறேன்" என்ருர்.

இதைக்கேட்ட மன்னன், "புலவரே! இதென்ன புதிதாக இருக்கிறது(என்றுமே இல்லாத வியப்பிற்குரிய கேள்வியாகத் திகழ்கிறதே!" என்கிறுன்.

உடனே புலவர், "வேந்தே! செழுமையான கதிர்களைப்பெற்ற கதிரவன், செல்கின்ற வழிகளையும், அவன் அசைவதால் சூழப்படும் உலகத்தைச் சுழன்று வரும் முறைகளையும், காற்றியங்கும் திசையையும், எவ்வித ஆதாரமுமில்லாமல் நிற்கும் ஆகாயத்தைப் பற்றியும், ஆராய்ச்சி வல்லுனர்கள் ஆண்டாண்டு தோறும் ஆய்வு செய்து நேரிற் கண்டதுபோல் சொல்லுகிறுர்கள்; இருந்தாலும், தங்களின் கல்வியைப் பற்றி ஆராய்ந்துரைக்கும் தன்மை யாருக்கு இருக்கிறது? அறியும் அறிவாலும் அறியமுடியாத அடக்கம் கொண்டோய்! யானையின் கன்னத்தில் கண் எறியும் கல்லைப்போன் மறைத்த வலியையுடையது போல் இருக்கும் உன்னுடைய புகழை எங்கனம் புலவர்கள் விரிந்து பாடுவர்? யானும் அந்நிலையில்தான் உள்ளேன். பாய் மரத்துடனே மேல் பூரிக்கப்பட்ட பாயை மாற்றுமல், ஆற்று முகத்தில் வரும் போது சுருக்கிக் கொள்கின்றனர். ஆனுல் அதே பாய்மரம் கடலின்கண் செல்லும் படகில் விரித்து, வெளி நாடுகளிலிருந்து வரும் பொருள்களைக் கொணர்கிறது. அத்தகைய தனிச் சிறப்புற்ருேய்! நின்புகழை அடக்கிக்கொண்டு, யாருக்கும் தெரியாவண்ணம் அடங்கி கிடக்கிறது. ஆகவே என்னுலும் நின் புகழை அறிந்து கொள்ள இயலவில்லை!" என்று அவனது பண்பு நலன்களை மறைவாகப் பாராட்டுகிருர்.

இதைக் கேட்ட மன்னன், புலவரின் பேரறிவைக்கண்டு, அளவற்ற மகிழ்ச்சியோடு தேவையான பொருள்களைக் கொடுக்கிறுன்; அதோடு அரசவையம் கலைகிறது; முதுகண்ணன் சாத்தனுரும் முக மலர்ச்சியோடு அரசருடன் செல்கிருர்.

செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென் றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போருமுளரே யனைத்து
அறிவ றி வாகாச் செறிவினை யாகிக்
களிறுகவு ளடுத்த வெறிகற் போ
ஒளித்த துப்பினை யாதலின் வெளிப்ப
யாங்ஙனம் பாடுவர் புலவர் கூம்
பொ
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டா
புகாஅர்ப் புகுந்த பெருங்கலன் தகாஅ
இடைப்புலப் பெருவழிச்சொரியு
கடற்பஃ றுரத்த நாகிழ வோயே

—புறம்·

★

இக் கருத்தை அடிப்படையா கொண்டு பாடியவர், சோழநாட் தலைநகரில் வாழ்கின்ற மு கண்ணன் சாத்தனுர் என்னும் பு வராவர். இவர் நலங்கிள்ளி மறைத்துப் புகழும் தன்மை பே றத்தக்கனவாயுள்ளது. 'அவர கள் உன் புகழைப் பாடிஞ ஆனுல் உன்னுடைய புகழை எ ஞல் பாட இயலவில்லை." என் எடுத்துரைப்பது படிப்போரி மனத்தை விட்டு அகலாததாகும்

—வே. கபி

அடுத்த இதழ்

தேன்றலில்

18 விஷயங்கள்

?

கவிஞனும் தத்துவமும்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

காதல்கவி இதைச் சொல்லி விட்டு வெற்றி நடை நடந்தான். வேதாந்தக்கவி அவன் பக்கத்தில் வந்தான்.

"புல்லனே! ஆண்டவன், என்ன, பார்வதியை மணமுடித்தது காமக்கூத்தா! வெறும் விளையாட்டுக்கா? மடையனே! அதை உன் காதல் தத்துவத்தில் சேர்க்காதே! அது பாமரர்களின் காதல்— கல்யாணம் அல்ல!"

இருவருக்கும் தகராறு முற்றியது. மேற்குக் கவி சமாதானம் செய்தான்.

"தோழர்களே! புரட்சியை ஆரம்பித்து விடாதீர்கள். அடிப்படை இல்லாத புரட்சி கூடாது! தீர்க்க யோசியுங்கள். இருவரும் செய்வது தவறு!"

வேதாந்தக் கவியைக் காதல் கவி ஒரு போடு போட்டான். 'சரியான அடி!'

"இப்படித்தான் ஏழையைப் பணக்காரன் அடிக்கிறான்!" என்று ஒரு குரல் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள்.

"புரட்சி! வர்க்கப் புரட்சி! ஏழைகளை வாட்டும் அரசாங்கத்தை நசுக்க வேண்டும்! பணக்காரர்களை மிதிக்கவேண்டும். கவிஞனின் கவிதைகளில் எல்லாம் அது தெறிக்கவேண்டும். உலகில் இரண்டு பகுதி! ஏழை, பணக்காரன், மேல், கீழ், ஏழை, பணக்காரனாக வேண்டும்; அல்லது பணக்காரன் ஏழையாக வேண்டும். அப்போதுதான் உலகில் சமதர்மம் நிலவும். அதற்கு ஒரே வழி புரட்சி! வர்க்கப் புரட்சி! புனிதப் புரட்சி.

"பணக்காரன் என்றால் யார்?"

"பணம் வைத்திருப்பவன்!"

"அப்படியானால், இரண்டு ரூபாய் வைத்திருப்பவனுக்கு மூன்று ரூபாய் வைத்திருப்பவன் பணக்காரன் - மூன்று ரூபாய் வைத்திருப்பவனுக்கு ஐந்து ரூபாய் வைத்திருப்பவன் பணக்காரன்—மூன்று ரூபாய் வைத்திருப்பவனுக்கு ஐந்து ரூபாய் வைத்திருப்பவன் பணக்காரன்! அப்படித்தானே?"

"இல்லை! நான் சொல்வது முதலாளிகளை!"

"முதலாளிகளின் லட்சணம் என்ன!"

"ஏழைகளைக் கசக்கிப் பணம் சேர்க்கும் அனைவரும் முதலாளிகள்! பணத்தைக் குவித்து வைத்துப் பயன்படாமல் செய்வோர் முதலாளிகள்!"

"அப்படியானால் பணம் எங்கே குவிந்திருக்கிறதோ அங்கே முதலாளித்துவம் இருக்கும்! இல்லையா?"

"ஆமாம்!"

"அப்போது...சதை முதலாளிகளைக் காட்டிலும் கல் முதலாளிகளிடம் நிறையப் பணம் குவிந்திருக்கிறதே; அதைகவனிக்க வேண்டாமா?"

"கூடாது! சாமியைப் பற்றி பேசக்கூடாது! பேசினால் ஆத்திகர்கள் சமதர்மக் கொள்கைக்கு வரப் பயப்படுவார்கள்! புரட்சி தாமதமாகும்! சீக்கிரம் அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியாது!"

"சரி! பிறகு கல் முதலாளியிடம் உள்ள பணத்தை எப்போது கைப்பற்றுவது?"

"அரசாங்கத்தைக் கைப்பற்றிச் சட்டம் செய்தால் தீர்ந்து விடுகிறது!"

"அப்போது ஆஸ்திகர்கள் திரண்டு எழமாட்டார்களா?"

"போலீஸ்! ராணுவம்! துப்பாக்கி! ஆத்திகர்களை அடக்கி விடலாம்!"

"அது, அன்பு வழியாகாதே!"

"அன்பு --- அது, எனக்குப் பிடிக்காது. என்னோடு ஒத்து வாராதவர்களைத் தீர்த்துக் கட்டுவதுதான் எனக்குப் பிடிக்கும். புரட்சி நடத்தி சர்க்காரைக் கைப்பற்றி விட்டால் பிறகு சர்வாதிகாரமே போதும்!"

"தோழனே! இதில் தான் நான் வித்தியாசப் படுகிறேன். எல்லா ரக முதலாளிகளையும் பற்றி பிரச்சாரம் செய்ய வேண்டும்! ஆத்திகர்கள் மனதையும் மாற்ற வேண்டும்! ஜனநாயக முறையில் அரசைக் கைப்பற்ற வேண்டும்! அப்படிச் செய்தால் சமதர்மமும் வரும்; ஜனநாயகமும் வாழும்!" --- என்றான் மேற்குக் கவி!

"புரட்சி கலப்பற்ற வர்க்கப் புரட்சி! முதலில் அதுதான் தேவை!" என்று கத்தினான் 'புனிதப் புரட்சிக்கவி!'

அதுவரை கீழே உட்கார்ந்திருந்த அந்தக் கருப்புப் பெண் மேற்குக் கவியின் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

காதல் கவி அவளை அழைத்தான். மறுத்தாள்.

அவள் சொன்னாள்:

"முடியாது! நீ ஒரு மிருகம்! மென்மையை நீ அறியமாட்டாய்! நிதான புருஷன் இவன் தான்! இவனே என் உயிர்"

வேதாந்தக் கவி, கத்தினான்:

"ஏ பெண்ணே! மாயமே! நீங்கள் கடலிலே விழுந்து செத்துப் போங்கள். உலகம் உங்களால்தான் பாழாகிறது. சீ! பூலோக நரகம்! பெண் மாயை! மண் மாயை! அப்பன் மாயை! ஆத்தாள் மாயை! பணக்காரன் மாயை! ஏழை மாயை!"

புரட்சிக் கவி கூறினான்:

"பணக்காரனிடம் இதைச் சொல்; அவன் மாயை! ஏழையிடம் சொல்லாதே!"

"ஏழையிடம் சொன்னால் என்ன செய்வான்?"

"உன் எலும்பை முறித்து விடுவான்!"

பெரிய சண்டை! புரட்சிக் கவியும் வேதாந்தக் கவியும் வெளுத்து வாங்கிக்கொண்டார்கள்.

காதல்கவி சிகப்புக் காம ராணியை அழைத்துக் கொண்டு ஒரு புதர்ப் பக்கம் போனான்.

மேற்குக் கவியும் கருப்புப் பெண்ணும் கைகோர்த்தபடி கடற்கரை நோக்கினார்கள். உல்லாசமாகப் பாடினார்கள். திரும்பி வந்தார்கள்.

அங்கே! ... ... ?

வேதாந்தக்கவி ஆகாயத்தை நோக்கிய வண்ணம் கை கூப்பிச் செத்துக் கிடந்தான்.

அவனுக்குப்பக்கத்திலே ஒரு பெரியகுழி தோண்டியிருந்தது. அதற்குள் 'வர்க்கப் புரட்சிக் கவி' 'அண்டர்கிரவுண்ட்' ஆகி விட்டான்.

புதருக்குப்பக்கத்தில் கட்டிப் பிடித்தபடி காம ஜோடி நரம்புத் தளர்ச்சியால் மாண்டு கிடந்தது.

மேற்குக் கவி காதலியிடம் சொன்னான்: "கண்ணே எது உண்மை என்று தெரியாமல் அவன் செத்தான். எது புரட்சி என்றறியாமல் இவன் செத்தான். எது வாழ்வு என்று புரியாமல் இவன் மாண்டான். மூன்றையும் புரிந்து கொண்டால் தான் முன்னேற்றம் ஏற்படும்!"

பிணமாக வாழ்ந்த வேதாந்தக் கவி, உண்மையில் செத்துக்கிடந்தான்.

மிருகமாக வாழ்ந்தவன்? அப்படியே!

சாகத் தெரியாத 'உணர்ச்சி வாதி' சாவுக்குத் தயாராக மறைந்தான்.

இன்ப ஜோடி அங்கே குடில் அமைத்தது.

இரவு வந்தது.

அந்தத் தீவிலே ......

"ஈரிரண்டு நான்கு பூக்கள்
புல்லிதழில் போய் ஒடுங்கும்;
தமை மறந்து பூரிப்பார்
நலம்பாடி இரவு செல்லும்!"

தென்றல்

இடமாற்றம்

நமது அலுவலகம் 1955 ஜனவரி முதல் தேதியிலிருந்து 2/127 மவுண்ரோடு, சென்னை-6 என்ற விலாசத்திற்குமாற்றப்படுகிறதுஎன் பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

8-1-55 இதழிலிருந்து எண்ணற்ற புதிய பகுதிகள்! இலக்கியத்துறையில் நயமிகுந்த கட்டுரைகள், இன்னும் எத்தனை எத்தனையோ இன்பக் குவியல்கள்! அத்தனையும் கொண்டு அழகு தமிழிலே வெளிவரும்.

11-12-54 அன்று கண்ணதாசன் அவர்கள் கோகலே ஹாலில் இலக்கியம் கண்ட திராவிட நாகரீகம் என்ற தலைப்பில் காலட்சேபம் செய்வதாய் இருந்தார். அறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்து சில காரியங்கள் செய்ய வேண்டி இருப்பதால் ஒத்திவைக்கப்பட்டது. இடம் தேதி விரைவில் அறிவிக்கப் படும்.

இப்படிக்கு
பே. செங்குட்டுவன்

'தென்றல்' விற்பனையாளர்
P. ராமையா
தென்றல் ஏஜன்ட்
16. ராஜேந்திரர் 3 வது தெரு
மதுரை

கழகக் கொடி வணக்கம்

: கண்ணதாசன் :

வானகம் மேவாயே! இரு
வண்ணத்தமிழ்க் கொடியே! (வான)

தேனகம் தாயகம்
திராவிடம் வாழ்கென
நாநிலம் யாவையும்
நாடியே வாழ்த்திட (வான)

செம்புலப்பெயல் நீர்போல் திராவிட நாட்டினர்
அன்பினில் ஒன்றாகி, அறிஞர் தம்படையாகி
தம்புவி தமக்கென்று சாற்றுதல் கேளென்று
தாரணியோர்க் கெல்லாம் போரணி கூறியே (வான)

குறள்வழி ஆட்சியில் குளிர்தரும் காட்சிகள்
கொடுப்பதெம் கடனென்று அடித்தனம் முரசின்று
பொருள்நிறை தென்னகப் பொன்மனை வளங்கூறி
பூதலமேன் மக்கள் ஆசிகள் தனைக்கோரி (வான)

தாழ்ந்தனம் நாமென்று கருதிறங்காட்டி
தலைகொடுத்தே காக்க, செந்நிறம் நீட்டி
வீழ்ந்தது போதும் நீ! வீரனே விழியென்று
வீரர்கள் ஏற்றிட போர்முரசாய் நின்று (வான)

இட்லரின் காதலிகள்!

இரகசியத்தின் இரகசியம்

"அடால்ப் இட்லர்! அவன் ஓர் சர்வாதிகாரி! உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளத் திட்டமிட்டான்; அதற்காகக் களம் புகுந்து போரிட்டான்; மின்னல் வேகத்தில் வெற்றி பல கண்டான்; அதைவிட வேகமாக வீழ்ச்சியும் அடைந்தான்!" என்று மட்டும் சொல்லிவிட்டு முடியவில்லை அவன் கதை. வீரமும் திரமும் பின்னிக் கிடக்கும் போர்ச் செயல்கள்மட்டும் இடம் பெற்றிருக்கவில்லை அவன் வாழ்வில்! பலர் அறிய இரகசியங்கள் பலவும் அவனது வாழ்வில் மண்டிக் கிடந்தன.

புதிதாகப் புறப்பட்டுப் பரபரப்பூட்டி வரும் 'பறக்கும் தட்டு' கூட இட்லரின் இரகசியம் என்று சொல்லப்படுகிறது இன்று. சொல்லப் போனால், இட்லரே ஒரு இரகசியம்.

அந்த இரகசியத்தின் இரகசியத்தை எல்லாம், அவைகளில் பங்கு கொண்டவரும், இட்லரின் நண்பரும், புகைப்படக் கலைஞருமான என்ரிச் ஆப்மன் என்பவர் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அவைகளிலே மிகவும் சுவையுள்ளவை, இட்லரின் அந்தப்புர ரகசியங்கள்! இத்தனைக்கும் இட்லர் ஒரு 'வைராக்கிய பிரம்மச்சாரி!

'ஜெர்மனி என் மனைவி'—இட்லர்

வாழ்க்கை முழுவதும் திருமணம் புரிந்துகொள்ளாமல், தனி மனிதனாகவே இருந்துவிட முடிவு செய்திருந்தான். நண்பர்கள் எப்போதாவது திருமணத்தைப் பற்றிப் பேசத் துவங்கினால், இட்லர் சிரித்தபடி, "ஜெர்மனி, என் மனைவி" என்று சொல்வது வழக்கம். இட்லர் இதைச் சிரித்தபடி சொல்லி வந்தாலும், அந்த முடிவை அமுல் நடத்துவதில் விழித்தபடிதான் இருந்திருக்கிறான்.

'சம்சார பந்தத்தில்' அகப்பட்டுக் கொள்ள விரும்பாத அவன், பிறந்த குடும்பத்தின்மீதும் பற்றற்றவனாகவே வாழ்ந்திருக்கிறான். அலாம்ஸ் இட்லர், என்பவன் இட்லரின் சகோதரன். இன்றும் பெர்லினில்தான் இருக்கிறான். பாவ்லா அவன் தங்கை. இப்போதும் பவேரியாவில் இருக்கிறாள்: அவனைப் பற்றியோ, அவளைப் பற்றியோ, பேச்சுவாக்கில்கூட, இட்லர் ஒருவார்த்தையேனும் குறிப்பிட்டதில்லை. அவன் பிறந்து வளர்ந்த குடும்பத்தைப் பற்றி, இட்லர் கூறியிருக்கிறான் என்றால், அது இதுதான்:

'ஒரு குடும்பத்தில் பிறந்த பலரில் ஒருவன் எப்படியோ குறிப்பிடத்தகுந்த பெரிய மனிதனாகி விடக் கூடும். அதனாலேயே அந்தப் பெரியவனது சகோதர சகோதரிகளும் பெரியவர்களாகிவிட முடியாது! பெரிய மனிதனுக்குப் பிறந்த மகனே கூடப் பாரம்பரிய வழியிலே பெரியவனாகிவிட முடியாது. அதற்குச் சரித்திர ஆதாரமும் கிடையாது!"

அவனுக்குப் பின் பதவிக்கு வருகிறவன், அவனைவிட மிக்கவனாக இல்லாவிட்டாலும், ஒத்தவனாகவேனும் இருக்கவேண்டும் என்று விரும்பிய இட்லர், 'இட்லர் மகன் இட்லராக' வருவான் என்று நம்பவில்லை. இந்த நிலையில், அவனுக்கு ஒரு மகன் பிறந்தால், இட்லருக்குப்பின் யார், என்ற பிரச்னை குழப்பமாகிவிடக் கூடும் என்பதும், அவனது பீஷ்ம விரதத்துக்கு ஒரு முக்கிய காரணம்!

வார்சை விரும்பாத இட்லர், பெண்களை வெறுத்தானா? அவன் வெறுத்தது திருமணத்தைத் தானே ஒழிய, பெண்களை அல்ல. அவர்களது 'சகவாசத்தை' அவன் பெரிதும் விரும்பினான். கோயபல்ஸ் மூலம் இளம் நட்சத்திர நடிகைகளை வரவழைப்பதும் அவர்களுக்கு விருந்தளிப்பதும், அவர்களோடு அளவளாவிப் பேசுவதும், இட்லருக்கு மிகவும் பிடித்தமான நிகழ்ச்சிகள். அந்தப் பெண்களும் இட்லருடன் குதூகலத்தோடுதான் பழகினார்கள். அவர்களில் யாரையேனும், ஏன் ஜெர்மனியில் எந்தப் பெண்ணையேனும் இட்லர் விரும்பியிருந்தால், திருமணம் தடையின்றி நடந்திருக்கும். ஆனால் இட்லர் அதை விரும்பவில்லை. அவனுக்குப் பூக்கள் என்றால் பிடிக்கும்; அதற்காகத் தோட்டக் காரனாகத் தயாராயில்லை இவன்!

'பரம ரசிகன்'

பெண்களை அவன் விரும்பினான்; நேசித்தான்; ரசித்தான்! ஆனால் அதற்கப்பால் போகவில்லை! இப்படிப்பட்ட 'இலட்சணமுள்ள' பெண்களைத்தான் அவன் விரும்பினான் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. பொதுவாக அவன் 'மெல்லியலாரைத்'தான் விரும்பினான். உதட்டுச் சாயம், நகத்துக்குப் 'பாலிஷ்' போடுவது போன்ற 'அழகுக்கு அழகு செய்யும்' முறைகளைப் பெரும்பான்மையான நாஜிகள் வெறுத்தபோது இட்லர் இதை ஆதரித்தான்.

ஒரு முறை, 'கூந்தலை வெட்டிச் சுருள் சுருளாக 'பாப்' (**Bob**) சிங்காரம் செய்துகொள்ளும் பெண்களைக் கட்சிக் கூட்டத்தில் அனுமதிக்கக் கூடாது' என்ற விவாதம் கிளப்பப்பட்டபோது, இட்லர், 'பாப்' சிங்காரத்தை வரவேற்றான், என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கட்சியின் கட்டுக்கோப்பைப் பலப்படுத்த பெண்களும் தேவை என்பதை உணர்ந்திருந்த இட்லர், கட்சிக் கூட்டத்தில் பெண்களுக்கு முன் வரிசையில் இடம் ஏற்பாடு செய்யச் சொன்னான். தையல் ஊசிகளுடனும், பின்னல்வேலைக்குரிய தளவாடங்களுடனும் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கும் 'முன் வரிசைப்பெண்க'ளுடைய ஆரவாரமும், கைதட்டுதல்களும்தான் கூட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் என்பது இட்லரின் மேலான கருத்து.

நாஜிப் பெண்கள் அணிவகுப்பு ஒன்றைப் பார்வையிட்ட இட்லர், முதலில், அந்தச் சேவகிகளின் 'உடுப்பை' மாற்றச்சொன்னான்.

"பழைய 'கோணிப் பைகளில்' புகுந்துகொண்டிருக்கும் அந்தப் பெண்களை எந்த ஆணாவது கண்ணெடுத்து பார்ப்பானா? பழந்துணிகளில் கிழவிகளைப் புகுத்துவதற்கா கட்சி?...உம்—உடனே மாற்று அந்த 'யூனிபாரத்தை!' என்று கோபித்துக் கொண்டான். பின்னர் பெர்லின் நகரத்துப் பிரபல ஆடை அலங்கார நிபுணரைக் கொண்டு புதிய 'யூனிபாரம்' தயாரித்தார்கள்.

நாசீக் கொள்கையில் மனைவிகள் பங்கு

நாசீக் கொள்கையின் பலம் பொருந்திய பிரசார சாதனமாகவும் பயன்பட்டிருக்கிறார்கள், இந்தப் பெண்கள். தங்கள் கணவன்மார்களை நாஜிகள் பக்கம் திருப்புவதுதான் இந்தப் பெண்களின் முதலாவது 'திருப்பணி'. இந்தத் துறையில் பெண்களின் சேவை மகத்தானது. ஓய்வு கிடைத்தபோதெல்லாம் அவர்கள் அரசியலில் ஈடுபட்டார்கள். சுருங்கச் சொல்லின், நாஜிக்கொள்கைக்குத் தங்களைச் சற்றும் சுயநலமின்றி அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இந்தப் பெண்கள். கட்சியோ, இவர்களை ஒரு எல்லைக்குள்ளாகவே தான் வைத்திருக்கிறது. நாஜிக் கட்சியில் குறிப்பிடத் தகுந்த எந்தப் பதவியும் பெண்களுக்குக் கிடையாது! அவன் மேற்கொள்ளும் அரசியல் விவகாரங்களில் ஆண்களையே அனுமதிக்காத இட்லர், பெண்களை மட்டும் எப்படி அனுமதிப்பான்?

அரசியல் விவகாரத்தில் மட்டுமல்லாமல், அந்தரங்க விவகாரத்தில் கூடப் பெண்களை இட்லர், ஒரு எல்லைக்குள்ளும், கண்காணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் கீழும்தான் வைத்திருக்கிறான். அதனால்தான் இட்லரின் காதலிகள், 'சோகக் கதையின்' கதாநாயகிகள் ஆனார்கள்.

முதற் காதலி!

சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்த யாரையாவது அவன் நேசித்திருக்கிறான் என்று சொல்வதானால் 'ஆஞ்சலிகா ரோபல்' என்பவளைத் தான் குறிப்பிடவேண்டும். ரோபல் இட்லரின் சகோதரி மகள்.

இட்லரது கூட்டத்தில் ஆண்கள் தான் பெரும்பாலும் அங்கம் வகிப்பது வழக்கம். எப்போதாவது ஒரு பெண்ணும் கலந்துகொள்ளக் கூடும். அந்தப் பெண் கூட்டத்துக்கு அழகு செய்யலாமே தவிர, இட்லரின் நடைமுறைத் திட்டம் எதையும் எதிர்க்கக் கூடாது. ஆதரிக்கவும் கூடாது. இப்படிப்பட்ட கூட்டத்தில் ரோபல் வந்த பிறகுதான் 'களை கட்டத்' துவங்கியது. ஒயிலாகத் திரியும் அவளது சாயலும், அலட்சிய பாவங்களும் ஒவ்வொருவர் மனதையும் கவர்ந்தது. கட்சியின் 'கேந்திரமாகவே' மாறிவிட்டாள் அவள். ஆனைப்பட்ட இட்லரேகூட அவளுக்குப் பின்னே உட்காருவதை ஆட்சேபிக்கவில்லை! அவள் கூட்டத்தில் இருந்தாலே போதும். கூட்டத்தில் உற்சாகம் களிநடம் புரியும். எல்லோரும் அவளை மதித்தனர். இட்லரேகூட அவளை மதித்தான். அடால்ப் இட்லர் அந்தப் பருவப் பெண்ணோடு கடைத் தெருவுக்குக் கூடப் கூடப் போகத் தலைப்பட்டான்.

கடை கடையாக ஏறி இறங்கிப் பலவற்றையும் பார்த்துவிட்டு ஒன்றும் வாங்காமல் திரும்பும் ரோபலின் செய்கை அவனுக்குப் பிடிக்கவில்லை! ஆனாலும், ரோபல் அழைத்தும், அவளை அவன் ஓர் நாய்க்குட்டி போலப் பின் தொடர்ந்து சென்றான்.

ரோபலின் கூட்டுறவால், இட்லரின் சொந்த வாழ்வில் விறுவிறுப்புக் கூடியது. அவளோடு அவன் சினிமாவுக்குப் போனான். உல்லாசப் பிரயாணம் போனான். அவளோடு அவன் நடந்துகொள்ளும் முறையிலேயிருந்து அவன் அவளைக் காதலித்தான்என்று சொல்லிவிட முடியாது. அந்தக் குரலிலே இருந்த குழைவு, பார்வையில் இருந்த பரிவு இவைதாம் அவனைக் காட்டிக் கொடுத்தன. மியூனிச்சில் அழகான வீடு ஒன்றை அவளுக்காக அமர்த்தினான். அங்கே நவீன தளவாடங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் நிரப்பினான். சமையல் செய்யும் ரோபலின் கைவண்ணத்தை ஓயாமல் புகழ்ந்தான். இட்லர் அவளை 'தேவதையாக' வழிபட்டான் என்றே சொல்லவேண்டும். இருந்தும், அந்த எண்ணம், அவளைத் திருமணம் புரிந்து கொள்ளும் எண்ணம் அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

'அவளை மட்டும் அவன் மணம் புரிந்துகொண்டிருந்தால், உலகத்தின் சரித்திரமேகூட மாறியிருக்கலாம். அந்தக் காதல் உறவிலே தாம்பத்திய வாழ்விலே, அவனது அமைதியைக் குலைத்துவந்த சர்வதேச வெற்றி வெறி அவனை விட்டு நீங்கியிருக்கக் கூடும் அல்லவா?

அவளை நேசிக்கிறேன்; அவளைத் திருமணம் கூடப் புரிந்துகொள்ளலாம் நான். என்ன செய்வது? நான்தான் திருமணமே புரிந்து கொள்வதில்லை என்று முன்னரே முடிவுசெய்து விட்டேனே!' என்று ஒரு முறை இட்லரே வாய்விட்டுச் சொல்லியிருக்கிறான்.

அவள் அவனுக்கு அழகின் உருவகம். ஆசைதீர அவளைப் பார்ப்பதிலும், அவள் அழகை இருவிழிகளாலும் அள்ளிப் பருகுவதாலும் மட்டுமே திருப்தியடைய முடிந்தது அவனால்!

ரோபல், கொஞ்ச வயதுக்காரி. வாழ்க்கையை அனுபவிக்கத் துடிதுடிக்கும் பருவத்திலே, இட்லரின் கண்காணிப்பிலே, கட்டுப்பட்டு வாழும் வரட்டு வாழ்க்கையைக் கொண்டு மட்டும் அவளால் திருப்தியடைய முடியவில்லை. ஒவ்வொரு நாளும், ஒரேஇடத்தில், அதே மனிதர்களோடு, அலுத்துப்போன அரசியல் விஷயங்களைப் பேசுவது என்ற 'குத்தின நெல்லையே குத்தும்' மாறுதலற்ற வாழ்க்கை அவளுக்குப் பிடிக்கவில்லை. ஊரில் உல்லாசமாக நடமாடவும், பலரோடு பழகி உறவாடவும் விரும்பினாள். ஒருநாள் நாட்டிய சாலைக்குப் போகவேண்டும் என்றாள். இட்லர் அனுமதிக்கவில்லை. எப்படியோ அனுமதி கிடைத்தது அவளுக்கு! அவளைப் பின்தொடர்ந்து செல்ல இரண்டு நண்பர்களை நியமித்தான் இட்லர். சுதந்தரமற்றுக் கேளிக்கையிலே கலந்துகொண்ட அவள், இன்பத்தைக் காணவில்லை. மனோ உல்லாசம் வேண்டும் என்று விரும்பிய அவள் மனம் புழுங்கினாள். இந்தக் கட்டுப்பாட்

டின்கீழ் அவள் களிப்படையவில்லை என்று இட்லருக்கு உணர்த்திய போது, அவன், “ நான் அவளை நேசிக்கிறேன். அவளது எதிர்காலம்தான் முக்கியம். இந்தக் கட்டுப்பாடு அவளது ஆனந்தத்துக்கு முட்டுக்கட்டையல்ல ! அவளை ஏமாற்றும் ஆண்களின் வலையிலோ, வேட்டைக்காரர்களிடமோ அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க நான் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை !” என்றான்.

ஆனால் ரோபலே ஏற்கெனவே ஒருவனைக் காதலித்திருந்தாள். அவன் யார் ? அவனும் அவளைக் காதலித்தானா ? அவன் அவளைக் காதலித்திருந்தால் ஏன் அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளவில்லை என்ற உண்மைகள் மட்டும் யாருக்கும் தெரியாது. சொந்த வாழ்வு பற்றிப் பேசுகையில், நிதானத்துடனும், அளவறிந்தும் பேசும் வழக்கமுள்ள ரோபல், ஒரே ஒரு தடவை மிக நெருங்கிய ஒரு தோழியிடம் ‘ அந்தக் காதலன் உயிரோடிருக்கும் ஒரு கலைஞன் ’ என்று மட்டும் கூறியிருக்கிறாள்.

“சாவே வா ”

பருவத்தின் ஆசாபாசங்களால் அலைக்கழிக்கப்பட்ட ரோபல், ‘ அட்டவணை ’ வாழ்க்கையை வெறுக்கத் துவங்கினாள். இட்லர் அவளிடம் அன்பு மொழிகள் பேசினான். அவை காதலிலே, ஒரு இளம் பெண் விரும்பும் ‘ சொல்லித் தெரியாத ’ அந்த ஊமை மொழியிலே ஊறி வெளிவந்தவை அல்ல. இது அவளுக்கு வெறுப்பூட்டுவதை உணர்ந்த இட்லரின் கட்டுப்பாடு இன்னும் புலப்பட்டது. இந்தக் கொடுமையிலிருந்து வெளியேறி வியன்னாவுக்கோ, வேறெங்காவதோ போய்விட மட்டும் அவள் ஏனோ விரும்பவில்லை. நான்கு ஆண்டுகள் அவள் இந்த நிலையிலேயே வாழ்ந்தாள். இட்லர் தன்னைக் காதலிப்பதாகவே எண்ணினாள் அவள். அத்தக் ‘ காதல் ’ இட்லரின் சுயநலத்துக்காக மட்டும் தான் என்று ஒரு கணம்கூட சந்தேகித்ததில்லை அவள். ஒரு நாள் அவளுக்கும் கண் திறந்தது.

1931, செப்டம்பர் 17-ம் தேதி இட்லர் தன் சகாவான் ஆகாப்மனுடன் வெளியே போகப் புறப்பட்டபோது, ரோபல் வழியனுப்ப வந்தாள். கூடஇருந்த நண்பரை நிறுத்திவிட்டு ஏனோ இட்லர் உள்ளே போய்விட்டு மீண்டும் திரும்பினான்.

இருவரும் காரில் ஏறி நியூரம்பர்க் நோக்கிப் புறப்பட்டனர். இட்லர்கூட இருந்த ஆப்மனிடம் பேசவேயில்லை. கடைசியில் பேசினான். ‘ ஏனோ என் மனம் சரியாக இல்லை. ஆப்மன் ’ அவனைக் கிளப்பூட்ட ஆப்மன் ஏதேதோ சொல்லிப் பார்த்தான். இட்லர் அதே மாதிரியாகவேதான் இருந்தான், அன்று இரவு, நியூரம்பர்கில் தங்கி, மறுநாள் அவர்கள், பெய்ரூத்துக்குப் புறப்பட்டார்கள். கொஞ்சதூரம்போவதற்குள்ளாகவே, நியூரம்பர்க் ஓட்டல் சிப்பந்தி அவரிடம் ஓடிவந்தான். “ரூடால்ப் ஹெஸ் உங்களைப் போனில் அழைக்கிறார்” என்றான்.

இட்லர், போனில் ஹெஸ்ஸிடம் பேசினான். ரோபலின் மரணச் செய்தி, தற்கொலைச் செய்திதான் அவனுக்குக் கிடைத்தது. ரோபலின் துடிக்கும் உயிர் விடைபெறுவதற்குமுன் அவளைப் பார்க்கும் ஆசையில், தலைதெரிக்கும் வேகத்தில் திரும்பினான். அவளது உயிர் அவனுக்காகக் காத்திருக்கவில்லை.

இன்னொரு காதலிதான் காரணமா ?

தற்கொலைக்குக் காரணம் என்ன என்பது மட்டும் நிச்சயமாகப் புலப்படவில்லை. நெருங்கிய தோழி ஒருத்தியிடம் ஒரு கலைஞனைக் காதலிப்பதற்காகக் கூறியிருந்த ரோபல் வேறொருத்தியிடம் இட்லரையே காதலித்தாகக் கூறியிருக்கிறாள். அவள் அறையைத் துழாவியதில் ஏவாபிரான் என்னும் பாடகி ஒருத்தி, இட்லருக்கு எழுதியிருந்த கடிதம் ஒன்று மட்டும் கிடைத்தது. ஒரு வேளை இந்தக் காதலியின் கடிதம் காரணமாக இருந்திருக்குமோ? இதுதான் காரணம் என்றால், தற்கொலைதானா அதற்குப் பரிகாரம் ?

நண்பரை வெளியே நிறுத்திவிட்டு, ரோபாலிடம் போன இட்லர் அவள் காதோடு காதாக ‘ ஏதோ ’ முணு முணுத்ததாகவும், ரோபல் அதனால் கோபம் கொண்டவளாகக் காட்சியளித்ததாகவும் வேலைக்காரி சொன்னாள்.

இட்லரின் சிப்பந்தி ஒருவன், அன்று பிற்பகல் அவன் இட்லரைச் சந்திக்கப் போனபோது, ரோபலைச் சந்தித்ததாகவும், எப்போதும்போல் அவளுடன் அவன் சாதாரணமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தபோது இட்லர் திடீரென்று அங்கு வந்ததாகவும், என்றுமில்லாத் திருநாளாய் அன்று அவனை, இட்லர் ரோபல் முன்னிலையில் கடிந்துகொண்டு கண்டபடி ஏசி விரட்டியதாகவும் கூறியிருக்கிறான். அன்று இட்லர் அவனைச் சுட்டு வீழ்த்தாததுதான் அதிசயம் என்கிறான் அவன் !

பொதுவாக, அவள் தனது கைகூடாத கலைஞன் காதலை எண்ணியும், இட்லரின் கட்டுப்பாட்டின் புழுக்கத்தாலும், கணநேர ஆவேசத்தில் என்ன செய்கிறாள் என்பதே தெரியாமல் தற்கொலை செய்துகொண்டிருக்கூடும்.

இட்லர் மஜ்னூவானான்

ரோபலின் மறைவுக்குப் பின் இட்லர் அமைதியிழந்துதவித்தான், அவளது உருவப் படங்களைப் பெரிய அளவில் வரையச் செய்து தன் இருப்பிடங்கள் பலவற்றிலும் தொங்கவிட்டான். ஆங்காங்கு அவளது வெண்கலச் சிலைகளும் (பாதி அளவில்) அலங்கரிக்கத் துவங்கின. அவளது நினைவுக்கு ஏறத் தாழ ஒரு மதச் சடங்குக்குரிய பயபக்தியுடன் மரியாதை செலுத்தினான்.

பெரிதும் தனிமையை விரும்பிய இட்லர், ரோபல் உயிர் துறந்தஅந்த மாளிகையில் இருக்கப் பிடிக்காமல் ஆஃப்மனுடன் வேறொரு நண்பரின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே அவர்கள் போய்ச் சேர்ந்தபின், சிப்பந்தி ஒருவன், ‘ எங்கே இந்த ஏக்கத்தில் இட்லரும் தற்கொலை செய்துகொண்டு விடுவானோ ’ என்ற அச்சத்தில் இட்லரின் கைத்துப்பாக்கியையும் எடுத்துச் சென்றுவிட்டான்.

‘ பாலும் கசந்ததடி ’

அங்குமிங்கும், அப்படியும் இப்படியுமாக நடைபோடும் இட்லர், என்ன சிந்திக்கிறான் என்பதைக் கூட ஆப்மனால் கண்டுகொள்ள முடியவில்லை. மேல் மாடியில் இட்லர்...கீழே ஆப்மன் நடைபோடும் சத்தம்கூட நின்றுவிடவே, ஆப்மன் இட்லரின் அறைக்கு ஓடோடியும் சென்று அவனை அழைத்தும் பதில் இல்லை. ஆனால் மறுபடியும் நடைபோடும் சத்தம் மட்டும் கேட்கத் துவங்கியது. மணிக்கணக்கில் நீடித்தது இது.

மறுநாள் காலை பொறுமையிழந்த ஆப்மன் கதவைத் தட்டித் திறந்துகொண்டு உள்ளே போனார். அதைக் கூடக் கவனியாமல் இட்லர் அங்குமிங்கும் நடந்தான், நடந்தான் அப்படி நடந்தான்.

சிரிக்காத முகம் ; அதில் கவிந்திருக்கும் இருள் ; கண்களுக்குக் கீழ் கருவளையங்கள் , கசப்பை விழுங்கியதுபோல் நெளிந்திருந்த உதடுகள், இப்படிக் காட்சியளித்தான் இட்லர். அங்கே அவனுக்காக வைக்கப்பட்டிருந்த பாலும், பிஸ்கோத்துக்களும், அப்படியே கிடந்தன ! சாப்பிடச் சொன்னால் அதற்கும் பதில் இல்லை ! அவனுக்காக ஆப்மன் தாமே உணவு தயார் செய்து கொடுத்தும், வேண்டாம் என்று தலையசைத்து விட்டான்,

கல்லறைக்கு மரியாதை

இந்த செய்தியறிந்த பின் இட்லரும் ஆப்மனும் வியன்னாவுக்குப் புறப்பட்டார்கள். இட்லர் மௌனமாகவே இருந்தான் இன்னும் வியன்னாவில் கல்லறைத் தோட்டத்தில், ரோபலின் கல்லறைக்குத்தன் மரியாதையைத் தெரிவிக்கத் தன்னந் தனியே போய்வந்த இட்லர், திரும்பும் வழியிலேதான் பேசத் துவங்கினான்.

போராட்டம் துவங்கட்டும்.வெற்றியடைய வேண்டியதும், நிச்சயம் அடையப் போவதுமான நமது போராட்டம் துவங்கட்டும். ”

நகரத்துக்கு நகரம் ஓடினான். கூட்டம் கூட்டமாகச் சேர்த்துப் பேசினான். ஆவேசத்தை யூட்டியது அவன் சொல்மாரி. மேடையேறி அவன் பேசியபோது, ஏதோ ஒரு அசாதாரண சக்தி அவனை ஆட்டி வைப்பதுபோலத் தோன்றிற்று. இப்படி அரசியல் மேடைகளிலே கலந்து கொள்வதனால், தன்னை வாட்டும் ரோபலின் நினைவைவிரட்ட நினைத்தானோ, என்னமோ ?

அடுத்த காதலி !

ரோபலின் கதை வெகு சிலருக்குத்தான் தெரியும். அதற்கடுத்த காதலி ஏவா பிரான் ! அப்பப்பா, அவள் கதை எங்கும் பரபரப்பூட்டியது,

1930-ல், ஆப்மனின் புகைப் படச் சாலையில் விற்பனை செய்யும் பணியில் அமர்ந்தாள் ஏவா ! அப்போது அவளுக்கு வயது பத்தொன்பது. இட்லர் விரும்பும் மெல்லியலார் ரகத்தைச் சேர்ந்த அவளுக்கு, வட்ட முகம் ; கருநீலக் கண்கள் ; அடர்ந்த, ஒழுங்காக வாரிவிடப்பட்ட செம்பட்டைக் கூந்தல் ! இவ்வளவுக்கும் மேலாக, தனக்கு அழகு தரும் ஆடைகளை தானே சுயமாகத் தைத்துக்கொள்வாள்.

அங்கு வேலை செய்யும் எல்லாப் பெண்களையும் இட்லருக்குத் தெரியும். சில சமயங்களில், இட்லர் ஏவாவோடு பேசுவதுண்டு. ஆனால் அந்தப் பேச்சில் அப்படி எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. எப்போதாவது ஏதாவது அவளுக்குப் பரிசு தருவதும் உண்டு. இதில் ஏதும் ‘ அர்த்தம் ’ இருப்பதாக யாரும் எண்ணவில்லை. ஆனால் அவளோ. இட்லர் அவளைத் தீவிரமாகக் காதலிப்பதாகச் சொல்லிக் கொண்டாள். அவன் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக வேறு, பெருமை பிடித்துக் கொண்டாள், மற்ற பெண்களிடம்.

மூலம் :
“ இல்லஸ்ட்ரேட்டட் ”
தமிழாக்கம்
“ மாஸ்கி ”

உண்மையில் அவள் அவனுக்கு ஒரு வேடிக்கையாகவும், விநோதப் பொருளாகவுமே இருந்திருக்கிறாள். அவன் சில சமயங்களில், “அந்த ஏவாவை இங்கு கூப்பிடுங்கள், கொஞ்சம் வேடிக்கையாக யிருக்கும் ” என்று கூறியிருக்கிறான். மற்றவர்களிடம் இல்லாத ஒரு கவர்ச்சி அவளிடம் இருந்தது உண்மை. அதை அவன் விரும்பியிருக்கலாம், அவ்வளவுதான் ! அதாவது, சாதாரணமாக, மனிதன் கடுமையான உழைப்புக்குப் பின், பொழுது போக்கும்வேடிக்கை விநோதங்களை விரும்புவது போல, இட்லர் அழகான பெண்களிடையே இருக்க விரும்பினான்.

ஏவா அவனைக் காதலிக்கிறாள் என்பது இட்லருக்குத் தெரியுமா என்பதே சந்தேகத்துக் குரியதா யிருக்கையில், அவள் மனக் கோட்டை மட்டும் உறுதி யடைந்து வந்தது. உலகத்தின் விதியையே உருவாக்கிவரும் இட்லரின் ஆசைக் காதலியாக, அவனது காதலை உருவாக்கும் விதியாக தன்னைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்வதிலே தனி ஆனந்தம் அவளுக்கு. இட்லரின் மாளிகையில், அவனது ஓய்வு நேரத் தோழியாக வாழ்ந்தாளே, அதைத் தவிர வேறெதையும் கண்டறியாத அவளுக்கு அந்தக் கற்பனைதானே கதி.

ஏவாவையாவது திருமணம் செய்துகொண்டிருக்கலாம் அவன். அதைப் பற்றி அவனிடம் குறிப்பிட்டபோது, அவளை நான் பராமரித்து வருகிறேன் என்றால், அதற்கு அர்த்தம் அவளை நான் கல்யாணம் செய்துகொள்வேன் என்பதுதானா ?” என்று கேட்டான்.

ஏவாவுக்கு அரசியல் அனா ஆவன்னா கூடத் தெரியாது. தெரிந்துகொள்ளும் ஆசையும் அவளுக்கு இல்லை. இட்லர் அவளை நேசித்தற்கு இதுவும் ஒரு காரணம். ஆண்களின் அரசியல் உணர்வில் பெண்கள் தலையிடுவதை அவன் விரும்பியதில்லை.

ஏவா, ரோபலைப்போல, கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டதில்லை. இட்லரோடு எங்கும் போனதுமில்லை. மியூனிச் மாளிகையில் வசிந்துவந்தஅவளை வாய்ப்புக் கிடைத்தபோது இட்லர்தான் சந்திப்பது வழக்கம். இல்லாவிட்டால் பெர்ஷ்டஸ்காடன் மாளிகைக்கு அவளை அவன் அழைத்துப் போவதுண்டு. அந்த மாளிகை, அவனது சகோதரியும், ரோபலின் தாயுமான ஃபிராரோபலின் மேற்பார்வையிலேதான் இருந்தது. இந்த ஜோடியைப் பார்க்கும்போதெல்லாம், தன் பெண்ணின் தற்கொலைக்குக் காரணம் இந்த ஏவாதான் என்றெண்ணுவாளாம் அவள். அது மட்டுமா ?

(அடுத்த இதழில் முடியும்)

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி

சென்ற இதழில்:

தளநாயகனும் - இராசேந்திரனும் பிடிபட்டு கருநாக மங்கையின் பின்னே அழைத்துச் செல்லப்பட்டனர். மங்கை இராசேந்திரனின் மேலாடைகளைக் களைந்தாள். அவன் முதுகைத் திருப்பிப்பார்த்தாள். தடாலென அவன் கால்களில் விழுந்தாள். மன்னிப்புக்கேட்டாள். வரவேற்ருள். ஏதோ ஒரு பணி தனியாக செய்து முடிக்கவேண்டுமென்ருள். 'மன்னர் வாழ்க' அன்னை வாழ்க! என்ருள். மர்மங்களின் காரணங்களை சொல்ல மறுத்தாள் 'மர்மம்! மர்மம்! தளநாயகன் சொன்ஞன்; இருவரும் பெண்ணையாற்றின் கரைக்கு கொண்டுவிடப்பட்டனர். இடை துறையானிடம் வென்ற நாட்டை அவனுக்கே திருப்பிக் கொடுத்தான் இராசேந்திரன். தளநாயகன் நினைவெல்லாம் நந்தினியிடம் இருந்தது. தளநாயகன் குதிரையேறி அரண்மனைக்குப் புறப்பட்டான். 'அன்னை வாழ்க' என்று ஒரு குரல் கேட்டுத் திடுக்கிட்டான். இடைதுறை நாட்டிலும் அன்னை வாழ்க! என்ன இது. ஆனல்...?

மினுக்கிட்டுக் கொண்டிருந்த வெளிச்சம் மட்டும் அவன் கண்களில்பட்டது. கூர்ந்து கவனித்தான் தளநாயகன். அந்த வெளிச்சம் நகர்வது தெரிந்தது. குதிரையைத் தட்டிவிட்டு பக்கத்தில் நெருங்கினன். நெருங்க நெருங்க வெளிச்சம் முன்னலே போய்க் கொண்டிருந்தது. இவன் எவ்வளவு வேகத்தில் முன்னல் போனனே அவ்வளவு வேகத்தில் வெளிச்சமும் முன்னல் போய்க்கொண்டிருந்தது. விடாமல் தொடர்ந்த தளநாயகன், இளமரக்காவுக்குள் அந்த வெளிச்சம் நுழைவதைக் கண்டான். அங்கே தான் விருந்து நடந்து கொண்டிருந்தது. விருந்தினரைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்த தீப்பந்தங்களோடு அந்த வெளிச்சமும் கலந்துவிட்டதைக் கண்டான். சந்தேகமில்லை. யாரோ ஒரு ஆள் தான் தீப்பந்தத்தை ஏந்தி உள்ளே வந்திருக்கமுடியும். தளநாயகன் தீர்மானத்தோடு குதிரையைவிட்டு இறங்கினன். படபடப்போடு வேகமாக விருந்து வட்டத்துக்குள் சென்ருன். ''யாரும் அசையக் கூடாது அப்படியே இருங்கள்'' என்று கத்தினன். இராசேந்திரனுக்குத் திகைப்பு மேலிட்டது. இடைதுறை மன்னன் ஆச்சரியத்தோடு நின்ருன். ஆடலழகியரும் அணித்தலைவர்களும் படைகளும் தளநாயகனின் சத்தங்கேட்டுத் திகைப்போடு மௌனமாக நின்றனர். தளநாயகன் ஒவ்வொருவரின் பக்கத்திலும் போய்ப்பார்த்தான். ஒவ்வொரு ஆளைப்பார்க்கும்போதும் 'இந்த ஆளாக இருக்குமோ' என்ற சந்தேகம் வந்தது அவனுக்கு. தங்களுடன் வந்தவர்களைத் தவிர மற்ற ஒவ்வொருவரும் ரகசியமனிதராகப் பட்டது அவன் கண்களுக்கு.

ஒரு பெண்ணின் அருகில் வந்ததும்தளநாயகன் நின்ருன்; கூர்ந்து கவனித்தான்.

'ஏய் நீ யார்'

'நாட்டியக்காரி'

'விருந்தின் ஆரம்ப முதல் இங்கே இருக்கிருயா?'

'ஆமாம்! அதிலென்ன சந்தேகம்?'. தளநாயகன்அதட்டினன் ''உண்மையைச் சொல் நீ இப்போது தானே வந்து புகுந்தாய்?'' அந்தப் பெண் மென்று விழுங்கினள். இன்னும் பொறுமையாக இருக்க இராசேந்திரனல் முடியவில்லை. ''தளநாயகா! என்ன இது'' என்று கத்தினன். ''ஒன்றுமில்லை மன்ன! நடந்ததைப்பிறகு சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு இடைதுறை மன்னரிடம்,

''மன்னவரே! இந்தப் பெண்ணை எங்களிடம் ஒப்புவிக்க வேண்டும்'' என்று கூறினன். இடைதுறை மன்னன் முகம் கறுத்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் ''ஏன் என்ன காரணம்?'' என்று குளறினன் இடைதுறை மன்னன். இராசேந்திரன்எழுந்தான். 'தளநாயகா, இப்பொழுதே விஷயத்தைச் சொல்' என்று கத்தினன். தளநாயகன் அவன் பக்கத்தில் செல்ல இருவரும் தனியாகச் சிறிது தூரம் சென்று நின்றனர். தளநாயகன் நடந்ததை விளக்கினன். இராசேந்திரன் சிரித்தான்.

''பித்தன் நீ! அந்தக் குழப்பம் உன்னை விட்டு நீங்கவில்லை. ஒரு இடத்தில் 'அன்னை வாழ்க' என்று சத்தம் கேட்டால் உலகெல்லாமா கேட்கும். ஏன் இவ்வளவு குழம்புகிருய்' என்ருன். தளநாயகன் அழுத்தம் திருத்தமாகத்தான் கண்டது உண்மையே என்று சாதித்தான். இராசேந்திரன் அவனை அடக்கி 'கண்டாலும் பரவாயில்லை! பேசாமல் இரு'' என்று கூறிவிட்டு ஆசனத்தில் வந்தமர்ந்தான. தளநாயகன் அமைதி இழந்தவனக அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளைக் காணவில்லை. 'மன்ன! அந்தப் பெண்ணைக் காணேம்' என்று மறுபடியும் கத்தினன் தளநாயகன். இடைதுறை மன்னன் பெருஞ்சிரிப்புச் சிரித்து, 'இதோ இருக்கிருளே' என்று ஒரு பெண்ணைக் காட்டினன். 'இவளல்ல அந்தப் பெண்' என்று தளநாயகன் சொன்னதை இராசேந்திரனும் ஒப்புக்கொள்ளவில்லை. இராசேந்திரன் தளநாயகனைப் பக்கத்திலேயே உட்காரவைத்துக் கொண்டான். பொழுது புலரும் சமயத்தில் விருந்தும் வேடிக்கையும் முடிவுற்றது. தளநாயகன் மட்டும் முடிவற்ற குழப்பத்தில் இருந்தான். எல்லோரும் இடைதுறை அரண்மனைக்குப் புறப்பட்டனர். தனக்கென்று ஒதுக்கப்பட் மாளிகைக்கு இராசேந்திரன் சென்ருன். அரண்மனைக்குப் பின்புறம் இருந்த மாளிகையின் ஒரு அறையில் தளநாயகன் ஓய்வு கொண்டான். இரவெல்லாம் உறக்கம் இல்லாமல் அலுப்புற்றிருந்த தளநாயகன் கண்களை மூடித் துயிலுலகம் சேர்ந்தான். அவன் முகத்தை இரண்டு கைகள் வருடுவதை அந்தப் பெருந் தூக்கத்தினிடையிலும் அவன் கண்டு கொண்டான். திறக்கமாட்டாமல் கண்களைத் திறந்தான். எந்தப் பெண்ணை அவன் சந்தேகித்தானே அவள் இப்போது அவன் அருகில் உட்கார்ந்திருந்தாள்.

இதழ் மூடிக் கண் காட்டும் ஏந்திழையாள் யாரோ?
எழில் கூட்டும் பொன் இதழை எதற்கு மறைத்தாளோ?
அன்னை வாழ்க! இன்னும் சில வாரங்களில்...

5

நந்தினி எங்கே? வந்தது மோசம்!

உண்பதற்குப் பண்டமுதவி நல்லபால் கொணர்ந்தார்!
சற்று விடாய் தீர்ந்து தனியே படுத்திருந்தேன்;
முற்று மறந்து முழுத்துயிலி லாழ்ந்து விட்டேன்
பண்டு நடந்ததனைப் பாடுகின்றவிப் பொழுதும்
மண்டுதுய ரெனது மார்பையெலாங் கவ்வுவதே.

—பாரதி.



இடக்கரத்தில் வாள் தூக்கும் வீரன் இவன் யார்?
இப்பொழுது கேட்காதே! பொருத் திருந்து பார்!

நந்தினியைப் பிரிந்து சென்ற மரகதம், தன் இல்லம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். தன் தந்தை இன்னும் அரண்மனையில் இருந்து வரவில்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். மரகதத்தின் தந்தை பெயர் **அரிசங்கமன்.** அவர் பூதேவ குலத்தோன்றல். ஐம்பெருங்குழுவி லொருவஞன **புரோகிதப்புஞ்சராய**ரின்உதவியாளர் தான் அரிசங்கமன். அரிசங்கமன் இராசேந்திரன் அவையில் இடம் பிடித்துக் கொண்டதே ஆச்சரியமான நிகழ்ச்சியாகும். சிறு பருவத்திலிருந்தே ஒன்றுக்கும் உதவாதவன் என்று தள்ளப்பட்டு புரோகிதத் தொழிலைக்கூட சரிவரசெய்யாத அரிசங்கமன் வயது ஏற ஏற அரண்மனைக்குள் கண்ணோட்டம் செலுத்தினான். தனது 27-ம் பருவத்திலிருந்தே, ஐம்பெருங்குழுவில் அங்கம் வகித்த புஞ்சராயர் வீட்டிற்கு அடிக்கடிபோய்வர ஆரம்பித்தான் அரிசங்கமன். புஞ்சராயர் இட்ட வேலைகளைச் செய்வதும், அவர் 'என்'னென்னும் முன்பே எண்ணையாக நிற்பதும், அவருக்கு நம்பிக்கையான நண்பராக நடிப்பதும், அக்காலத்தே அரிசங்கமன் கைக்கொண்ட முறைகளாகும். நாளாக ஆக அவன் நடிப்பிலே மயங்கிய புஞ்சராயர் அவனைத் தன் கூடவே வைத்துக்கொண்டார். புஞ்சராயரின் மகள் **தரங்கிணி** தாய் இழந்தவள். தனிமையில் வாழ்ந்தவள். அவளை அரிசங்கமன் தன் நடிப்பால் கவர்ந்தான். நாள் முழுதும் அரண்மனையிலேயே இருந்த புஞ்சராயருக்கு இந்த சேதி தெரியாது. அரசங்கமன் தன் வீட்டிற்கு வந்த பிறகுதான் தரங்கிணி சமஸ்கிருத ஸ்லோகங்களை அதிகமாக படித்துப் வைத்திருக்கிறாள் என்றும்-அதற்குக்காரணம் அரிசங்கமன்தான் என்றும் புஞ்சயார் பூரிப்போடு மற்றவர்களிடம் சொல்லிக் கொள்வது வழக்கம். மகள் படித்த சமஸ்கிருத ஸ்லோகங்கள்அனைத்துமே காதல்சம்பந்தப்பட்டவை என்று அவருக்குத்தெரியாது. அந்த ஸ்லோகங்கள் எந்தக் காவியத்திலும் இல்லாதவை என்பதும் தான் உற்பத்தி செய்தவைதான் என்பதும் அரிசங்கமனுக்கு மட்டும் தெரியும். ராயர் அந்தப்பக்கம் போக வேண்டியதுதான்; இங்கே அரிசங்கமனும் தரங்கிணியும் சமஸ்கிருத ஸ்லோகம் படிப்பதில் ஈடுபடுவார்கள். முதல் முதல் நாலடி தூரத்தில் உட்கார்ந்து சொல்லிக் கொடுக்க ஆரம்பித்த அரிசங்கமன், நாலடியை மூன்றடியாக்கி - மூன்றடியை இரண்டடியாக்கி - அதையும் ஒரு அடி தூரத்தில் கொண்டுவந்து நிறுத்தி, பிறகு அந்தஒரு அடியும் கடந்து அவள் மடியில் சாய்ந்து "பிடியே! கொடியே!" என்று பேச ஆரம்பித்து,

"கன்னிக் கடலமுதைக்
கண்டேனடி—கன்னம்
கன்னிச் சிவக்க முத்தம் தந்தேனடி!" என்று பாடி அவளை முழுதும் தன் வசப்படுத்திக்கொண்டான். அதுவரை உலகம் தெரியாமலிருந்த தரங்கிணி-அதற்குபிறகு பலபேருக்கு உலகத்தைப் பற்றி போதிக்கும் தகுதி பெற்றாள். தினசரி புஞ்சராயர் புறப்படும்பொழுது "அப்பா! உடை எடுத்து வைத்திருக்கிறேன். உணவெடுத்து வைத்திருக்கிறேன். ஏடெடுத்து வைத்திருக்கிறேன். எழுத்தாணி வைத்திருக்கிறேன்" என்றெல்லாம் தரங்கிணி சொல்வது வழக்கம். ராயரும் 'சந்தோஷமம்மா' என்று கூறி விடைபெற்றுப் போவது வழக்கம். ஒரு நாள் தரங்கிணி திடீரென்று 'அப்பா கர்ப்பம் தரித்திருக்கிறேன்' என்று சொன்ன போதும் - 'சந்தோஷமம்மா' என்று கூறி விடைபெற்றுச் சென்ற புஞ்சராயர் பத்து தப்படி சென்றதும் 'என்ன சொன்னாய்?' என்று திரும்பி வந்து கேட்டார். தரங்கிணி நாணத்தோடு ஆனால்பயமில்லாமல்தான்கர்ப்பிணியாய் இருக்கும் செய்தியைச் சொன்னாள். புஞ்சராயர் திடுக்கிட்டார். மானம் போன செய்தி அறிந்தார். வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார். 'ஐம்பெருங்குழு'வில் ஒருவரின் மகள் இப்படி அவமானச் சின்னமாக ஆகிவிட்டாள் என்றால் யார் வாய்தான் பேசாமல் இருக்கும். ராயர் ஊர்வாய்க்கு பயந்தார். 'உன்னைக்கெடுத்தஉலுத்தன்யார்' என்று மகளிடம் உறுமினார். தரங்கணியோ சிறிதும் பயமின்றி 'அரிசங்கமன் என் ஆசை மணாளன்' என்றாள். ராயர் கொதித்தார்! குதித்தார்! வழியென்ன என்று தேடினார். ஏதும் வழியின்றி அரிசங்கமனுக்கே தன் மகளைக் கட்டிவைத்து அரண்மனையிலும் அவனைத் தன் உதவியாளனாக வைத்துக் கொண்டார்.

★

அரிசங்கமனுக்கும் தரங்கிணிக்கும் பிறந்த குழந்தைதான் மரகதம். மரகதம் பூமியில் விழுந்ததும் தரங்கிணியின் ஆவியும் பிரிந்தது. அதற்கு பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு உள்ள கட்டத்தில் தான் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.......

பூட்டிக் கிடந்த வீட்டைப் பார்த்த மரகதம் 'அப்பா வர நேரமாகுமே! என்று திரும்பவும் நந்தினியைத் தேடி வந்தாள். அங்கேயும் வீட்டின் முன் பகுதி பூட்டப்பட்டிருந்தது. "தனியாக எங்கேயும் போக மாட்டாளே நந்தினி! எங்கே போனாள்?" என்று குழம்பினாள் மரகதம். அக்கம் பக்கத்தில் கேட்டுப் பார்த்தாள். ஒருவரும் சரியான பதில் சொல்லவில்லை. ஒரே ஒரு பெண் மட்டும் நந்தினி அழகான உடையணிந்து ஒரு ரதத்தில் ஏறிச் சென்றதாகக் கூறினாள். 'கூடயார் இருந்தார்கள்' என்று மரகதம் கேட்க யாரோ ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் இருந்ததாக அந்தப் பெண் சொன்னாள். மரகதம் குழப்பம் மிக்குற நந்தினி வீட்டின் வாசல் முன் வந்தாள். அங்கே உதிர்ந்த பூவும்-பாதி கிழிந்த ஏடும் கிடந்தன. அந்த ஏட்டில் "அன்னை வாழ்க!" என்று எழுதப்பட்டிருந்தது. ஒன்றும் புரியாத நந்தினி, அந்த ஏட்டைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு ஓடினாள். அப்பொழுது தான் அரண்மனையில் இருந்து திரும்பிய அரிசங்கமன், மேலாடையைக் கழற்றி விட்டு சுவற்றை இடித்துத் தள்ளுபவன்போல் சுவற்றில் ஏதோ செய்து கொண்டிருந்தான். அதைப்பார்த்த நந்தினி மறைவில் நின்று கொண்டு '**அன்னை வாழ்க**' என்று படித்தாள். வெறி கொண்டவன் போல் திரும்பினான் அரிசங்கமன். அங்கு கிடந்த வாளைத் தூக்கினான். மெது மெதுவாக நடந்து நாலாபுறமும் தேடினான். அவன் முன்னால் மரகதம் போய் நின்றாள். "நீ தான் மரகதம்! நீ தானா? வேறு யாருமில்லையே!" என்று படபடப்போடு கேட்டான். "இல்லையப்பா! நானேதான் இந்த ஏட்டைப் பாருங்கள்!" என்று ஏட்டை நீட்டினாள் மரகதம். நடந்ததைக் கூறினாள்.

"போய் விட்டாளா நந்தினி! தொலைந்து விட்டது திட்டம். வரட்டும் பார்க்கிறேன்" என்று கருவினான் அரிசங்கமன்-

"அன்னை வாழ்க! இன்னுமா வாழ்கிறாள்? எங்கே வாழ்கிறாள்? எப்படி வாழ்கிறாள்? என்ன செய்யப் போகிறாள்? பார்க்கத்தான் போகிறேன்!" என்று தன்னையு[...] யாமல் பேசினான்.

"என்னப்பா, என்ன சொல்[...]கள்!" என்று திகைப்போடு [...]டாள் மரகதம். அரிசங்க[...]மென்று விழுங்கி "இல்[...] உனக்கு புரியாது! யாரிடமும் எ[...]யும் கூறி விடாதே! கூறினால் [...] தகப்பன் உனக்கில்லை. எச்சரிக்[...]யாய் இரு!" என்று அவன் கூ[...] முடிப்பதற்கும் புஞ்சராயர் உள்[...] வருவதற்கும் சரியாக இருந்த[...] வயதேறிய புஞ்சராயர் அமைதியே[...] கட்டிலில் சாய்ந்தார்.

மரகதம் அவரிடம் ஏதோ கேட்[...] போக அரிசங்கமன் கண்காட்டி அ[...]ளைத் தடுத்து விட்டான். புஞ்சரா[...] ஏதுமறியாமல் அலுப்போடு கண்க[...] மூடினார். புஞ்சராயர் வந்த ரத[...]திலேயே ஏறி அரண்மனைக்கு செ[...]றான் அரிசங்கமன்.

★

தனியே வந்து மரத்தடியில் உ[...] கார்ந்த மரகதம் கனவுலகில் இரு[...] பதைப் போல் இருந்தாள்.

"நந்தினி எங்கே போய் இரு[...] பாள். யாராவது தூக்கிப்போ[...] இருப்பார்களா? அல்லது தானே[...] போய் இருப்பாளா? ஏன் அவ[...] போக வேண்டும். அவளுக்கு யா[...] இருக்கிறார்கள்! 'அன்னை வாழ்க[...]' என்ற ஏடு அங்கே இருக்கக் கா[...]ணம்? நந்தினி போனதற்கா[...] அப்பா ஆத்திரப்படுவானேன்[...] "அன்னை எங்கே வாழ்கிறாள்[...]" என்று அப்பா கேட்பானேன்[...]" என்று அவள் நினைத்து நினைத்து[...] குழம்பினாள். அப்போது அவள[...] தோழி அவளைப் பெயர் சொல்லி[...] அழைத்தவாறுவீட்டிற்குள் நுழைந்[...]தாள். வீட்டில் அவளுக்கு பதிலா[...] புஞ்சராயர் படுத்திருந்தார்.

மரகதம் பின்புறத் தோட்[...]திற்குத்தான் போனதாகபுஞ்சராய[...] சொன்னார். பின்பக்கத்திற்கு ஓடிய[...] சித்தினி மரகதத்தின் மவுனநி[...]லையைக் கண்டாள்.

'உண்ணவில்லையா? மரகதம்!' என்றாள்.

'ஊகூம்' என்று தலைய[...]

கண்ணதாசன்
Best copy available

இப்படி ஓர் காட்சியும்—சிக்கலான நிலமையும்......
இன்னும் சில வாரங்களில்!

...ால்பழம் கொண்டுவந்தாள். உண் ...ைச் சொல்லி ஊட்டினுள். என்ன ...ாரணம் என்று வினவினுள். ...துமபதில் சொல்லாமல் ...வற்றை உண்ட மரகதம், என் ...ைத் தனியே இருக்கவிடு சித்தினி! ...என்று கடைசியாகச் சொன்னுள்.

இது காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலருகின்ற நோய் போல் இருக்கிறது என்று கருதிய சித்தினியும் பேசாமல் வெளியேறினுள். கவலையும், குழப்பமும் நெஞ்சை அழுத்த, மரகதம் அங்கேயே தூங்கிவிட்டாள்.

6

கனவோ நனவோ காட்சியும் தவறோ...

எந்தஊர் என்றீர் இருந்தஊர் நீர்கேளீர்
அந்த ஊர்ச்செய்தி அறியீரோ—அந்தஊர்
முப்பாழும் பாழாய் முடிவிலோர் சூனியமாய்
அப்பாழும் பாழென்றறி.

கண்விழித்த தளநாயகன் ஆச்சரியமாக அந்தப் பெண்ணைப்பார்த்தான்.

"யார் நீ?"

"பார்த்தால் தெரியவில்லை!"

"இங்கு ஏன்வந்தாய்! நீதானே அந்த மாயக்காரி?"

"ஏன் வந்தேன் என்ருல் என் அத்தானைக் கண்டு பேச! ஆனுல் நான் மாயக்காரி அல்ல! இளமரக்கா விருந்திலே என்னைக் கண்டு ஏதேதோ கேட்டீர்கள். அப்பொழுது சொல்ல முடியாத பதிலையெல்லாம் இப்பொழுது சொல்லுகிறேன்"

தளநாயகன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"நான் அத்தான் என்று அழைக்கிறேன் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? நீங்கள் என் காதலர் என்ற பொருளில் நான் அப்படி அழைக்கவில்லை. என் அக்காளின் காதலர் என்பதற்காக அப்படி அழைத்தேன்."

"உன் அக்காளா! யாரவள்? என்ன உளறுகிருய்! இதென்ன மாயம்."

"மாயமுமல்ல! மந்திரமுமல்ல. நீங்கள் நந்தினியின் காதலர் தானே? நந்தினி என் அக்காள். தளநாயகரே! அவளுக்குத் தங்கை ஏதென்பீர். உமக்குத் தெரியாது. இப்போது சொன்னுலும் புரியாது. ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். அது என் கடமை. ஒவ்வொரு நாடாக ...ற்றி பெற்று வருகிறோம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். தவறு! சோழநாட்டிற் குள்ளேயும் வெளியிலும் சோழமன்னனுக்கு எதிராக ஒரு பெரிய சக்தி வேலை செய்து வருகிறது. இதை யாரிடமும் சொல்லக் கூடாது என்று என் அன்னை கட்டளை. ஆயினும் சொல்லக்கூடிய சிலவற்றை மட்டும் சொல்லுகிறேன், அந்த பகைச் சக்தி சோழநாட்டின் வாழ்வையே மாற்றிவிடக் கூடிய நிலையில் இருக்கிறது. இராசேந்திரனேடு சோழவம்சம் முடிந்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. கேட்டால் நீங்களும் சிரிப்பீர்கள். சோழனை வெல்லக்கூடிய பகையா? என்பீர்கள். ஓர்நாள் நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். ஆனுல் ஒன்றே ஒன்று எப்பொழுதும் எச்சரிக்கையாக இருங்கள். காலம் வரும். அப்போது நாம் சந்திப்போம். வருகிறேன் என்று அவள் புறப்பட ஆரம்பித்தாள். தளநாயகன் அவள் முந்தானையைப் பிடித்து நிறுத்தினுன்.

"பேசாமல் என்னை விடுங்கள். என்னை இப்போது யாருக்கும் காட்டிக் கொடுக்கக்கூடாது. சோழநாட்டின் நலங்கருதிச் சொல்லுகிறேன். இடைதுறையாணுக்கு அவன் நாட்டைத் திருப்பிக்கொடுத்ததே முற்றிலும் விவேகமற்ற செயல். அதைத் திருத்தி இடைதுறையானைக் கைது செய்யும்படி இராசேந்திரனிடம் சொல்லும். என்னை நீர் நம்பலாம். தயவு செய்து விட்டுவிடும். நல்லது சொல்லத்தான் துணிந்து இங்கே வந்தேன். தயவுசெய்து என்னை விட்டுவிடும். நான் இடைதுறையானுக்கு ஆதரவானவள் போல் நடித்து வருகிறேன். அவர்களுடைய திட்டங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். விருந்திலே என்னை நீர் பிடித்தபோது, விவரத்தைக் கக்கி விடுவேனே என்று பயந்து தான் என்னை வெளியேற்றினுன். இடைதுறையான். நானும் அப்போது சொல்வதாய் இல்லை. என்னிடத்திலே அவன் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருக்கிருன். நீங்கள் அவனைக் கைது செய்வதுதான் விவேகமானது. இவ்வளவு சொல்லிவிட்டேன். என்னைவிட்டுவிடும். காலம் வரும் மீண்டும் சந்திக்கிறேன்" என்று அவள் கூறியதைக் கேட்டு அவளை விட்டுவிட்டான் தளநாயகன். அவளும் பின்வாயில் வழியாக அரண்மனைக்குள் நுழைந்தாள். தளநாயகன் இராசேந்திரன் தங்கியிருந்த மாளிகைக்கு ஓடிவந்து தூங்கிக்கொண்டிருந்த இராசேந்திரனைத் தட்டி எழுப்பினுன்.

அப்பொழுதே இராஜேந்திரனைப் பார்க்வகந்த இடைதுறை மன்னன் தளநாயகன் தட்டி எழுப்புவதைப் பார்த்து ஒரு பக்கத்திலே ஒளிந்து கொண்டான். கண்விழித்த இராசேந்திரனிடம் தளநாயகன்.

"மன்னு! இடைதுறையானைக் கைது செய்யவேண்டும். கைது செய்யவேண்டும்!" என்று அலறினுன்.

தூக்கத்தில் இருந்த இராசேந்திரனுக்கு அந்த வார்த்தைகள் அறைகுறையாகத்தான் கேட்டன. ஆனுல் ஒளிந்துகொண்டிருந்த இடைதுறையானுக்கு முழுக்கக்கேட்டது. அவன் முகம் கருத்தது; அவன் வாய்அரிசங்கமனுக்குசெய்தி யனுப்பவேண்டும். அடுத்தென நடக்குமோ! அடிபாவி! என்று முணுமுணுத்தது. விடுவிடென்று அந்தப்புரம் நோக்கி நடந்தான்.

(தொடரும்)

<u>சிறு பொருள் விளக்கம்: 4</u>

மாதுளை

இது சிறு மரவகுப்பைச் சேர்ந்தது. முக்கியமாய் ஆப்கானிஸ்தானம், பாரம்சீகம் முதலிய இடங்களில் விசேடமாக வளருகின்றது. இந்தியாவில் அநேகமாய் எல்லா விடங்களிலிம் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் இனிப்பு, புளிப்பு, பூ மாதுளை என்று மூன்று வகுப்புகளுண்டு. பயன்படும் உறுப்புக்கள்.— பூ, பிஞ்சு, பழம், விதை, பட்டை, வேர்.

இதனுல் பித்தவாந்தி, வயிற்றுக் கடுப்பு, வெப்பம், இரத்த மூலம் இவை போகும். இரத்த புஷ்டியும், பலத்தையும் தரும்.

இதனுல் மலம், சீதம், இரத்தம் இவைகளின் நிறமாக ஆகின்றன பற்பல அதிசார ரோகங்கள் தீரும்.

பெருமை பெருநின்ற மாதுளங்கனிகளுக்குச் சந்தேகம் நீங்க, நினைப்பையும் பேச்சையும் ஒழிக்கின்ற சந்நியாசரோகம், வாந்தி, கபம், மிகுதாகம், பித்த நோய், இவை சேரமாட்டாது. புத்தி நிமித்தம் கங்காஸ்நானம் செய்து யாசிக்கச் செய்யும் மலட்டு வியாதி போகும். மேலும் அப்பழத்தைத் தின்பதால் வாய்நீர்ச் சுரப்பும், கசப்பும், வாந்தியும், விக்கலும், மாந்தமும், அதிக சுரமும், நெஞ்செரிவும், காதடைப்பும்' நீங்காத மயக்கமும் ஒழியும். வெடித்த பழத்தை சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய சீலையால் வடிகட்டி, தகுந்த அளவு கற்கண்டு சேர்த்து இரசத்தைச் சாப்பிட வெப்பு ஒழியும். சரீரம் முழுவதும் குளிர்ச்சியை அடையும்.

பூமொக்கை உலர்த்திச் சூரணமாக்கி இரண்டு குன்றி யெடை கொடுக்க இருமல் நீங்கும். மேற்படி சூரணத்துடன், ஏலக்காய்த் தூள், கசகசாத்தூள், குங்கிலியத் தூள் சமனெடை சேர்த்து ஒன்றிரண்டு குன்றி வீதம் தினமிருவேளை கொடுத்து வர, நாட்பட்ட அதிசாரம் சீதபேதி இவை நீங்கும்.

பூவின் சாறும், அறுகம்புல்லின் சாறும் சமனெடை சேர்த்துக் கொடுக்க இரத்தபீநசம் நீங்கும். மேற்கூறிய பூ, புல் இவ்விரண்டை கஷாயமிட்டுப் பொரித்த வெங்காரம் சிறிது கூட்டி வாய் கொப்பளித்து வரத் தொண்டை நோய் நீங்கும். இதையே மாதருக்குப் பீச்சி வர இரத்தப் பிரமேகம், வெள்ளை, கருப்பாசயப்புண், ஆசனத்து வாரப் புண் முதலியன நீங்கும்.

பிஞ்சைக் கஷாய மிட்டுச் சீதபேதி, அதிசாரம், முதலியவைகளுக்குக் கொடுப்பது நாட்டு வழக்கம்.

பழத்தோலுடன் சிறிது இலவங்கம், இலவங்கப் பட்டை நசுக்கிப் போட்டு முறைப்படி கஷாயமிட்டு ஆறவிட்டு அரைக்கால், அல்லது கால் ஆழாக்கு வீதம் தினம் மூன்றல்லது நான்கு வேளை கொடுத்து வர, நாட்பட்ட சீதபேதி, அதிசாரம் நீங்கும். பழத்தோல், மங்குஸ்தான் பழத்தோல், பாலைப்பட்டை வகைக்கு ஒன்றேகால் பலம் எடுத்து எட்டு ஆழாக்கு நீர் விட்டு முறைப்படி கஷாயம் செய்து அரைக்கால் அல்லது கால் ஆழாக்கு வீதம் கொடுத்து வரச் சீதபேதி நின்று போகும். பழத்தோலை உலர்த்தி சூரணமாக்கியும் உபயோகிக்கலாம்.

பழத்தோல் சூரணம் அரைப் பலம், சீமைச் சுண்ணும்புத் தூள் ஒரு பலம் சேர்த்துக் கலந்து உபயோகிக்கத் தந்த நோய்கள் விலகும்.

துயர கீதம்!

கவிஞன் பாடுகிறான்! காரிகை கண்ணீர் வடிக்கிறாள்! அன்றொருநாள்! அந்திசாயும் நேரம். ஆற்றங்கரையோரம்! அப்பொழுதுதான் அனற்பவளஜோதி மேற்குவானத்தில் மறைந்து கொண்டிருந்தது. வானத்தில் எழில் தேக்கி நின்றாடும் வர்ணக் கோலங்களைஅண்ணாந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான் கவிஞன். அவன் கைகள் பின்புறம் மணற்பரப்பில் புதைந்திருந்தது. அவன் வடிவழகன். அழகுக் கவிதைகளை எழுதி எழுதிக் குவிப்பவன். இயற்கை அள்ளி இறைத்திருந்த அழகெல்லாம் கொள்ளை போய்விடுமோ என்ற பயத்தாலோ என்னவோ சிறிது நேரத்திற்கெல்லாம் இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுதும் அவன் அசையவில்லை. கைதேர்ந்த சிற்பி செய்துவைத்த சிலைபோல் காணப்பட்டான். கொள்ளையழகு கூட வர,வைரப் பூக்கள் பரப்பப்பட்டிருந்த நீலப்பட்டின் மேல் நிர்வாணமாக நடந்து வந்தாள் அவள்! கோலவிழி இல்லை! கொவ்வை இதழ் இல்லை! முல்லைப்பல் வரிசையும்-மென் காந்தள் விரல்களும் இல்லை அவளுக்கு! ஆடவில்லை! அசையவில்லை. துணை கூட யாருமில்லை. இடை வெட்டிகடை கட்டவில்லை. நெளிவில்லை. வளைவில்லை. அழகைக் கொப்பளிக்கும் அங்கங்களில்லை. ஆனாலும் அவளிடத்திலே அழகு இருந்தது! 'ஓ! என் அழகுப் புதையலே. வைத்த விழி எடுக்காமல் எத்தனை நேரம் பொருத்திருப்பது! பேதை வெண்மாமதியே - போகவில்லையா உன் பெண் புத்தி. என் சித்தம் குழம்பி இருக்கும்போதெல்லாம் - சத்தமில்லா—ஆனால் சந்தோஷம் தருகின்ற கிளிப் பேச்சால் என்னைக் குளிர்வித்திருக்கிறாயே! ஏனோ? என் அழகு மயிலே இன்று மட்டும் காலம் தாழ்த்தி வந்தாய்! உன்னை நினைத்தாலே தேனூறுகிறது நெஞ்சத்தில்-பார்த்தாலே எட்டிப்பிடித்து கட்டியணைக்க என் இதயம் தாவுகிறது. ஆனால் எட்டாத உயரத்தில் நீ தங்கக் கட்டியாய் இருக்கிறாய். என் குளிர் குணப்பாவையே! நான் ...நான்....இல்லை இல்லை! என்னை மரணம் முத்தமிடப்போகிறது! ஏ! வானத்து சித்திரமே! வாரி இறைக்கிறாயே தங்கத் தூற்றலை! ஒரு விநாடி, வந்தெனை அணைத்துக் கொள்ள மாட்டாயா. திங்கள் ஒரு முறை உன் தங்க முக எழிலைக் குடிக்க, தவறாமல் வருகிறேனே. கூடி நிற்கும் அழகுருவே! கோல மணி விளக்கே!அதற்காகவாயினும் ஒரு முறை இரக்கம் காட்டு! என் அருமை நிலாக்கண்ணே! எங்கே எனக்குரியவள். அவள் அழகு முகம் கண்டால் நீ வெட்கித் தலை குனிந்து போவாய் - அவ்வளவு அழகி! என் உயிருடன் நேசங் கொண்டவள். என் பாசத்தில் வளரும் பைங்கிளி! இவ்வளவு நேரமாகியும் அவளைக்காணவில்லை. அவள் இல்லாமல் என் கற்பனை ஓட மறுக்கிறது - கவிதை வெளி வர மறுக்கிறது. அப்பப்பா! பெண் குலமே! பெரிது! பெரிது! உங்கள் சக்தி.

உம்...எல்லாம் எவ்வளவு நேரம். இன்னும் சிலமணி நேரங்கள் தானே உன்னையும்அவளையும் இன்று தானே கடைசிமுறையாக சந்திக்கப்போகிறேன். ஜோதி மணி விளக்கே! சொர்ணத்தின் வார்ப்படமே! எங்கே அவள் என் அழகுராணி! இப்படி ஏதேதோ வாயில் வந்ததையெல்லாம் பேசிக் கொண்டிருந்தான் கவிஞன்.

பூவினத்தோடு வண்டுகள் புது யாழை மீட்டிக் கொண்டிருந்தன. அந்த மென் ஓசை கவிஞனின் செவிகளில் விழுந்தது. தன் நெஞ்சிலே வளர்பவள் நெருங்கி வந்து. நெற்றியைத் தடவிக் கொடுத்து-நேருக்கு நேர் முகம் நிறுத்தி இறுகத் தழுவி இதழ் கூட்டி முத்தமிடும்போது ஏற்படுமே 'இச்'சென்ற ஓர் ஒலி! அது அப்பொழுது கவிஞனின் நினைவிற்கு வந்தது. மீண்டும் ஆரம்பித்தான். ஓ! என் காதலி-சாவின் நெடுங்குழியில் சாய்ந்து நான் வீழ்வதற்குள்-சருகாய் உதிர்ந்து நான் மாய்வதற்குள்-என் ஒப்பற்ற பெண்ணோவியமே! அரும்பிப் பூத்த அழகுப் புதுமலரே அமுத கலசமே! உன்னை உன் அழகை அள்ளி அள்ளிச் சுவைக்கிறேன். மீண்டும் எப்பொழுது உன்னைச் சந்திக்கப் போகிறேன். ஆசை மதுவே! நேசமுள்ள தீஞ்சுடரே! நின்னழகை என் சொல்வேன்! நினைத்திட்டால் இனிக்குதே நெஞ்சம் நல்லுயிரே-உன் முல்லை நிகர் புன்னகையை-கடைசி முறை நான் பார்க்கவேண்டும். குளிர் மணத்தைக் கொண்டு வா! உன் மெல்லிய தோளிலே-மென்பட்டு மேனியிலே நான் படுத்தபடியே துயில்கிறேன். என் செல்வமே! மூடிக் கிடக்கும் காதல் மாளிகையைத் திறந்து-ஆடிவரும் தென்றலுடன் - காதல் கீதம்பாடி மகிழலாம்! வா! என் உயிரே! ஓடிவா! ஒய்யார கீதம் பாடிவா! கவிஞனின் தாபம் வளர்ந்து விட்டது-தன் காதலியின் வருகையை விழி திருப்பாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பளிங்குச் சிலைமேனி! பார்ப்போரை மயக்கி விடும் பருவத்து ராணி! பவழ இதழும் - பளபளப்பான வெண்பட்டுச் சேலையும் - அடடா! நிலை தடுமாறச் செய்துவிடும். அவள் உடலெல்லாம் கலைத் தேக்கம்! கண்களோ காதற்கலசங்கள்! பொங்கும் அவள் பருவத்தில் இளமை சிரித்துக்கொண்டிருந்தது! இன்றெல்லாம் நின்றபடியே பார்த்துக் கொண்டிருக்கலாம் அந்த பெண்ணிற் பேரழகியை! பொன் நிற மேனியாளை. அன்ன நடை போட்டு வருகிறாள் அந்த இன்ப ரோஜா...அதோ...அதோ பார்த்து விட்டாள் தன் 'இதயத்து'ராஜாவை. அவன் பொங்கும் மணிமார்பில் அப்படியே புதைந்து விடலாமா என்று கூட எண்ணினான் கவிஞன். அவன் விழிகள் அதைச் சொல்லிற்று. ஓடி வந்தாள் தங்கக்கிளி! "ஒய்யார மயிலே அப்படியே நில்! ஒரு விநாடி விழி குளிரப் பார்க்கிறேன் உன் எழிலுருவை! அன்பே! அசையாதே! ஆசை தீர உன் அங்கங்களின் அழகை ரசிக்கிறேன். என் தங்கமே உன் செங்கரங்களை இப்படி நீட்டு. கண்களில் ஒத்திக்கொள்கிறேன்! சிவந்து தேன் வழியும் இதழ்களைக் கூட்டுமுத்தமிடுகிறேன்-கோத்த முத்தென்பேனே! அந்த அழகை சிரித்துக்காட்டு! என் சிங்காரப்பெண் சிலையே! உன் பட்டு உடல் பஞ்சணையில்-நான் மென் மொட்டாகி புரள்கிறேன்...இதயமே ...இப்படிவா...இன்பமே! என்னை இறுகத் தழுவிக்கொள்: நம் இருவர் இதயத் துடிப்பும் இணைந்து ஒலிக்கட்டும். நம் இருவர் மூச்சும் சேர்ந்து கலக்கட்டும். நம் இருவர் உடலும் ஒட்டி சூடேறட்டும். அப்பொழுதுதான் என் ஆசை! என் இறுதி லட்சியம்-நான் இந்த உலகிற்கு தரும். கடைசி கவிதை இத்தனையும் உருவாகும். என் கவிச் சுவையே -காதலி...வா.அருகில்வா. அள்ளிக்கொள் என் இதயத்தை என்று கூறிவிட்டு அவளை அன்புடன் அணைத்து அவள் பொன்மடியில் தலை வைத்தபடியே வானத்தை உற்றுப்பார்க்கிறான்.

அவள்தான் அவன் காதலி. அவளுக்காகத்தான் இவ்வளவு நேரம் கண்மூடாமல் காத்திருந்தான். ஓவியப் பெண் உருவைக் கண்டுவிட்டான். மணற்பரப்பை மஞ்சமாக்கிக் கொண்டு மானசீக அமைதியில்...இல்லை...இல்லை.....! கலைபடித்தான் கவிஞன். ஆம் இரவெல்லாம்! விடிந்தால் மரண தண்டனை! **அது** கொற்றவன் ஆணை!

புலர்ந்தது விடிவெள்ளி! பிரிந்தனர் இருவரும் பிரியமனமின்றி. அலர்ந்தது அவள் முகம்! அடடா! மயக்கம்! பவழ வாய் திறந்து பாகு மொழி உதிர்த்தாள் பாவை! பதில் சொன்னான் பாவலன். நம் காதல் கதையெல்லாம் இந்த கடைசியாமச் சதிராட்டத்தோடு முடிந்து விட்டது. அன்பே......நாளை ஐயோ என் ஆவியே! அசைந்தாடும் தோகையே என் செய்வேன் நான்!

கவிஞன் பாடுகிறான்! காரிகை கண்ணீர் வடிக்கிறாள்! சாக்காட்டில் விழப்போகும் செஞ்சுடரே! என் செல்லக்காதலரே! என் உயிர் விழுந்த பின் வாழ்வேனோ நான். தூக்குமேடையிலிருந்து என்துரையே உன்னை...ஐய்யய்யோ! எரிதணலில் விழுந்து சாகிறேன் நான்! ஓ! என் உளம் நிறை காதலா! என் ஆசைக் கவிஞரே... அய்யோ! நான் என் செய்வேன்! விம்மி விம்மி அழுதாள் அவள். நாளை வரும் அப்பொழுது நம் மரண வேளையும் வரும் அதற்குள் இன்பக் கவிதைகளில் எழில் காண்போம். தொல்லை சூழ் உலகிலிருந்து செல்வோம். காலம் ஓடுகிறது; நாளை வருவதற்குள் ஒரு முறை! எ
சோலைக்குயிலே! வீணை நரம்பொ
யில் இசை யெழுப்பி-காதல் கீத
பாடுவோம்! ஆம்! கொஞ்ச நேரம
வது கவலையை மறந்து சுதந்திர
பறவைகளாக சிறகடிப்போம்
கவிஞன் காதலியைக் கேட்டான்
இப்படி.

'அவள் இப்பொழுது பேச வில்லை
அவள் மென் கரங்கள் கவிஞனின்
கழுத்தை கொடி போல் சுற்றி
வளைத்துக் கொண்டது; அவள்
அழுதாள்! தாரை தாரையாக
கண்ணீர் வழிந்து கொண்டிருந்

ஏ. கே. வில்வம்

தது. பாவம்! முகமெல்லாம் வீங்கி
சிவந்து விட்டது. அவ்வளவு அழு
தாள். என் அன்பே அழாதே! ஏன் அழுகிறாய்! பிறக்கும் பொழுது தான் அழுது கொண்டு பிறக்கிறோமே! சாகும் பொழுதாவது சிரித்துக் கொண்டு சாவோமே! தப்ப முடியாது என்று தெரிந்த பின் ஒப்பாரி வைத்துப் பயன் என்ன! சாகஅஞ்சுகின்றவர்களுக்கு இவ்வுலகில் வாழ உரிமை கிடையாது! சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்; என் சித்திரச் சோலையே சிரி! பாடு! எங்கே ... என் சிந்தையைக் குளிரவை: சாகப் போகிறவனின் கடைசி ஆசை! சுந்திரக் கவி பாடிச் சுகம் காண்போம் ... என்று கூறி விட்டு கவிஞன் வானத்தை நோக்கியபடி பாடுகிறான் காரிகை அவன் மடியில் முகம் புதைத்து விம்மி விம்மியழுகிறாள். ஆம்! **கவிஞன் பாடுகிறான்! காரிகை கண்ணீர் வடிக்கிறாள்!** கவிஞனுக்கோ அது இன்ப கீதம்! காரிகைக்கோ அது இதயத்தை அரிக்கும் துயர கீதம்! யாரால் தடுக்கமுடியும்; ஊராள்வோன் கட்டளை. விடியப் போகிறது. விடிந்தால் மரண தண்டனை கவிஞனுக்கு! எதற்கும் கட்டுப்படா அந்தஏகாந்த கவிஞன் கேவலம் பலி பீடத்தின் பயங்கரப்பசிக்கா தன் உடலை இரையாக்குவான்! மறுநாள் அந்த மணற்பரப்பில் இரண்டு பிணங்கள்! ஒன்று ஆண்! மற்றது பெண்! கூட்டைவிட்டு இரண்டு வானம்பாடிகள் பறந்து விட்டன.

★

கர்நாடக தி. மு. கழக முதலாவது
சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

பெங்களூர் மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில்
நடைபெறும்

18—12—54 சனி :	**19—12—54 ஞாயிறு :**
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : **காஞ்சி கல்யாண சுந்தரம்**	தலைவர் : **என். வி. நடராசன்**
திறப்பாளர் : **ப. உ. சண்முகம்**	திறப்பாளர் : **தோழியர் அருண்மொழி**

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் **அண்ணாதுரையும்,**
மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்.

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின்
இசைவிருந்து உண்டு.

★

19-12-54 பிற்பகலில் என். எஸ். கிருஷ்ணன்
குழுவினரால்

"நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்)
வரவேற்பாளர்: ரூ.3, பிரதிநிதி: ரூ.2, பார்வையாளர்: ரூ.1,
பெண்கள் : அணா 8

பர்மியத் தலைநகரில் பயங்கரக் கொலை!

பயங்கர சம்பவங்களை உயிரோட்டமாகக் கொண்டு செல்லும் கதைகளில் சிலருக்கு தணியாத ஆசை! சோக நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கும் கதையெனிலோ, ஒரே மூச்சில் படித்து முடிக்கும்பொழுது ஒரு சொட்டு கண்ணீர் விட்டு விட்டுத்தான் புத்தகத்தை மூடிவைப்பர் பலர், இருள் சூழ்ந்த அந்தக் குகையில் அலாவுதீன் தேம்பிக்கொண்டிருந்தான். திடீரென ஒரு சப்தம்! பாறை பிளந்து சரிந்தது...இப்படி துவக்கப்படும் கதைகளில் சிலருக்கு உயிர். காரணம் பயங்கர சம்பவங்களிலும் - அவலத்திலும்கூட சுவை காணுகிறது மனித உள்ளம். சில ஆண்டுகளுக்குமுன் பர்மாவில் நடந்த படுகொலை, உலகின் கவனத்தையே கவர்ந்துவிட்டது. இப்படியும் நடந்ததா? என்று வியப்பு மேலிட்டனர். நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் சம்பவம் 19-7-1947-ல் பர்மாவில் நடந்தது. பட்டப்பகலில் மந்திரிசபை நடந்துகொண்டிருக்கும்பொழுதே ஏழு மந்திரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலை செய்த கூட்டத்தின் தலைவனும் ஒரு மந்திரி. பெயர் கலூன் ஊசோ! இந்தப் படுகொலை - இந்திய உபகண்டத்தில் காந்தியார் கொல்லப்பட்ட சம்பவம் தந்த அதிர்ச்சியைவிடப் பெரியது; காந்தியார் கொல்லப்பட்டபின் இந்திய உபகண்டத்தின் அரசியல் தெளிவும் - பொலிவும் கெட்டு - சீரழிந்து வருவதுபோல - பர்மா அரசியலிலும் இந்த படுகொலைக்குப் பிறகு சீரழிவு ஏற்பட்டது. பர்மாவில் நடந்த அந்தப் படுகொலை-அதன் வழக்கு-தீர்ப்பு முதலியவற்றை பல ஆங்கில வெளியீடுகளிலிருந்தும் - செய்தித்தாள்களிலிருந்தும் - புத்தகங்களிலிருந்தும் இங்கே தொகுத்துத் தருகிறோம். தொடர்ந்தும் தருவோம். பழைய சம்பவங்கள்தான் என்றாலும் மீண்டும் ஒரு முறை நினைவிற்கு கொண்டுவந்து நிறுத்திப்பார்ப்போமே! சுவை இல்லாமலா போய்விடும்!

ஊசோ :— கோர்ட்டாரவர்களே, குற்றவாளிகளாகக் கருதப்படும் எங்கள் 9 பேருக்கும் கவர்ன்மெண்ட் சார்பாக லாயர் ஏற்படுத்தினுல், அவர் பயத்தை முன்னிட்டு எங்களுக்கு சாதகமாக வாதாடுவாரென நாங்கள் நம்பவில்லை. ஆனுல் தாங்கள்அப்படி ஏற்பாடு செய்வதாக இருந்தால்உண்மைக்குவாதாடுபவர்களாக, எங்களுக்கு தனித்தனியாக ஏற்படுத்தாமல் ஒரே லாயரை ஏற்படுத்தவேண்டும்.

நீதிபதி :—தாங்கள் சொல்லிய பிரகாரம் லாயர்கள் பயத்தினுலோ அல்லது மற்றெக்காரணத்தினுலோ வர சம்மதிக்காவிட்டாலும், இயன்றளவு நாங்கள் ஏற்பாடு செய்யத் தயங்கமாட்டோம். ஆனுல் தாங்களே லாயர் ஏற்பாடு செய்வதாயிருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

ஊசோ :—நானும் லண்டனிலிருந்து லாயர் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதே பிரகாரம் லண்டன் லாயர் இரண்டு பேரும், பர்மா லாயர் மூன்று பேரும் ஆக 5 பேரைக் கொண்டு ''எதிர் வாதக் கமிட்டி'' ஒன்று ஏற்படுத்தி வாதாடுவதற்கு உரிமை வேண்டும்.

நீதிபதி :—அப்படியே செய்து கொடுப்போம். ஆனுல் லண்டனிலிருந்து லாயர்கள் சீக்கிரம் வந்து விடுவார்களா ?

ஊசோ :—லண்டனிலிருந்து இன்று பி. ஓ. ஏ. ஸி. விமானமூலம் மிஸ்டர் வெட்டானஸ் புறப்படுகிறுர் என்று எனக்கு தந்தி வந்துள்ளபடியால், அவர் இங்கு வந்து சேர்வதற்கு குறைந்தது 6 நாளாகும். அவர் வந்தபின் அவருடன் கலந்தாலோசித்த பிற்பாடு, லண்டனிலிருந்து லாயர் வரவேண்டியதிருப்பதால், கோர்ட்டார் 2 வாரத் தவணை கொடுக்கவேண்டும்.

நீதிபதி :—இரண்டு வாரத் தவணை என்பது அதிக நாளாகின்றனபடியால் கவர்ன்மெண்ட் அட்வொகேட் சம்மதப்படி ஏற்பாடு செய்வோம்.

ஊசோ :—கவர்ன்மெண்ட் அட்வோகேட் ஏற்படுத்தும் பர்மா லாயர்கள்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லையானதால் லண்டன் லாயர் வந்துதான் கேஸ் விசாரணையை ஆரம்பிக்கவேண்டும்.

நீதிபதி :—லண்டனிலிருந்து லாயர்கள் கண்டிப்பாய் வருவார்களா ?

ஊசோ :—கண்டிப்பாய் வருவார்கள், ஆனதால் தவணை வேண்டும்.

நீதிபதி :—ஊஸோ தெரிவித்த பிரகாரம் எல்லா குற்றவாளிகளுக்கும் சம்மதந்தானு ?

மற்ற குற்றவாளிகள் :—எல்லோருக்கும் சம்மதந்தான்.

ஊஸோ :---லண்டனிலிருந்து லாயர்கள் வந்தவுடன் அவர்கள் மற்ற எனதுசகாக்களுடன் கேஸ் சம்பந்தமாக சந்தித்து பேசவேண்டும். அப்படி நாங்கள் எல்லோரும் சந்தித்து பேசுமிடத்தில் எந்த ஒரு அதிகாரிகளும் இருக்கக் கூடாது.

நீதிபதி :---அப்படிச் செய்து கொடுக்க முடியுமென்று நினைக்கிறேன். ஆனுல் வரும் லாயர்களை என்னிடம் சந்திக்கும்படி ஏற்பாடு செய்யும். கவர்ன்மெண்ட் அட்வோகேட் அவர்களே, ஊஸோ கேட்பது தங்களுக்கு சம்மதந்தானு ?

மிஸ்டர் வெர்ட்டரான்ஸ் சரியாக 9-50 மணிக்கு வந்தார். முதல் நம்பர் குற்றவாளியான ஊசோ முன் போலவே அழகிய பர்மிய ஆடையுடன் முகமலர்ச்சி இல்லாது. சரியாக 10-5க்கு கொண்டு வரப்பட்டார். மற்றும் லாயர் தாராவடி ஊசாவின், ஜோபிங்காங் ஊத்தெய்ன சோ குற்றவாளிக்காக ஆஜராயிருந்தனர்.

ஊசோ மகள் பேபிசோ, மாமனுர் ஊலூகலே, மற்றும் சில உறவினர்களும் வந்திருந்தனர். அயல் நாட்டு பத்திரிகை நிருபர்களும், உள் நாட்டு பத்திரிகை நிருபர்களுமாக சுமார் 40 பேர் வரையில் வந்திருந்தனர். இன்சீன் ஜெயிலை சுற்றிலும் பலவிதமான ஆயுதங்களை தாங்கிய போலீசாரும் மிலிடேரியாரும் காவல் புரிந்து வந்தனர். சரியாக 10-10 மணிக்கு நீதிபதிகள் அவர்களுடைய ஸ்தானங்களில் வந்தமர்ந்து வழக்கு விசாரணையை ஆரம்பித்தார்கள்.

கோர்ட் கூடியதும் பிரதம நீதிபதி, கவர்ன்மெண்ட் அட்வகேட்' ஊசோ, மிஸ்டர் வெர்ட்டரான்ஸ் ஆகியோருக்கிடையில் பின் கண்டவாறு சம்பாஷணைகள் நடைபெற்றது:--

நீதிபதி:— குற்றவாளி களுக்கு லாயர்கள் ஏற்பாடாகி விட்டதா ?

அட்வகேட்:— 6-ம் நெம்பர் குற்றவாளி தூகா தெரிவித்த பிரகாரம் லாயர் ஊபாடுன் என்பவரை சர்க்கார் ஏற்படுத்தியுள்ளனர்.

நீதிபதி:— ஊசோவுக்கு லாயர் ஏற்பாடாகி விட்டதா ?

ஊசோ:— ஆம், மிஸ்டர் வெர்ட்டானஸ் வந்துள்ளார்.

நீதிபதி:—மிஸ்டர் வெர்ட்டானஸ் அவர்களே, தாங்கள் ஊசோ தரப்பில் வாதாடச் சம்மதமா "

வெர்ட்டானஸ்:— நான் தற்சமயம் பர்மாவிற்கு வியாபாரி என்ற முறையில் வந்துள்ளேன் ஆனுல் நான் இங்கிருக்கும் வரையில் ஊசோவிற்காக வாதாட தீர்மானித்துள்ளேன்.

நீதிபதி:— தாங்கள் தெரிவித்த பிரகாரம் வாதரடலாம், போக இஷ்டப் பட்ட காலத்தில் போய் விடலாம் மற்றும் தாராவாடி ஊசரன்வின், ஜோபிங்காங் ஊத்தெய்ன்ச்சோ ஆகிய இருவரும் தங்களுடன் சேர்ந்து வாதாடுவார்களல்லவா ?

வெர்ட்டானஸ்:— ஆம் அவர்கள் இரண்டு பேரும் மற்ற குற்றவாளிகளாகிய தேட்நீ, மவுன்சோ யான்ஜீ. அவுங், மொவுன்ஜீ ஆகியோர்களுக்காக வாதாடுவபர்கள்.

நீதிபதி:—அவர் குறிப்பிட்ட நான்கு பேர்களுக்கும் சம்மதமா?

நாலு குற்றவாளிகள்:— ஆம், சம்மதம்.

உடனே கவர்ன்மெண்ட் அட்வொகேட் ஊடுன்பிபூ அவர்கள் எழுந்து கொலை வழக்கு முழு விபரங்களையும் ஆதியோடந்தமாக பின் வருமாறு எடுத்துரைத்தார்:—

அட்வகேட் :— தற்சமயம் நடைபெறும் கேஸ் சாதாரன செஷன் கேசல்ல, ஆகையால் லண்டனிலிருந்து மிஸ்டர் வெற்ட்டானஸ் கூடிய சீக்கிரம் வரப் போவதால் அவர் வந்தவுடன் கேசை ஆரம்பித்தால் நலமாயிருக்கும். பர்மாவில் ஊசோ ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்ன லாயர்களின் பெயரைத் தெரிவிக்க முடியுமா ?

நீதிபதி:— ஊசோ அவர்களே, நான் பத்திரிகைகளில் தங்களுக்கு வெளி ஜில்லாக்களிலிருந்து லயர் வந்திருப்பதாக அறிந்தேன். நீங்கள் அவர்களின் பெயரைத் தெரிவித்தால் நாங்கள் அவர்களுடன் சந்தித்து வேண்டியதைச் செய்து கொடுப்போம்.

ஊசோ:— இங்கிருக்கும் மற்ற குற்றவாளிகளில் சில பேருக்காக ஏற்கனவே பல கேள்விகளில் வாதாடிய எனது சகோதரராகிய தாராவாடி ஊசாவின், ஜோபிங்கா ஊ தெய்ன்சோ, மற்றொருவராகிய ஊ கங்கே ஆகியோரை நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனுல் ஊ தங்கே ஆஜாராவதைப் பற்றி நான் தீர்க்கக் கூற முடியாது.

நீதிபதி:— மேற்படி லாயர்களை என்னுடைய வீட்டிற்கு வரும்படி செய்தால், நான் அவர்களுடன் சந்தித்து வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுக்கமுடியும்.

ஊசோ:—சில லாயர்கள், அவர்களுக்கு ஆபத்து ஏற்படுமென்று என் தரப்பில் வாதாட பயப்படுவதால் அரசாங்கத்தார் அவர்களுக்கு பாதுகாப் ' பளிக்க முடியுமா ?

நீதிபதி:— என் வீட்டிலும் தற்சமயம் ஆயுதந் தாங்கிய 10 ஏபோக்கள் காவல் புரிந்து வருகிறுர்கள். ஆனுல் உண்மைக்கு வழக்காடுவதற்கு யாரும் பயப்பட வேண்டியதில்லையே.

நீதிபதியவர்கள் மற்ற குற்றவாளிகளைப் பார்த்து ஊசோவால் ஏற்படுத்தும் "எதிர்வாதக் கமிட்டி"க்கு எல்லோரும் சம்மதமா" என்று கேட்டார். அதற்கு மவுங்சோ, தேட்நீ, யான்ஜீ அவுங், மெவுனஜீ, மவுன்நீ ஆகியோர் சம்மதமென்று தெரிவித்தார்கள்.

கீன்மவுன்யீ, செய்ன்ஜீ ஆகிய இருவரும் தங்களுக்கு எந்த எதிர்வாதமும் தேவையில்லை யென்று தூகா என்பவன் மட்டும், அரசாங்கத்தார் சார்பாகதனக்குலாயர் ஏற்படுத்திக் கொடுக்கும் படியும் தெரிவித்தான்.

நீதிபதி:— குற்றவாளிகளின் நிபந்தனைகளுக்கு கவர்ன்மெண்ட் அட்வோகேட் சம்மதமா ?

அட்வோகேட்:— சம்மதந்தான். ஆனுல் ஊசோ - தெரிவித்த படி வெற்ட்டான்ஸி வந்தவுடன் 15-10-47 புதன் கிழமை இந்த விசாரணையை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும்.

ஊசோ:— மற்ற குற்றவாளிகளை போலீஸ் அதிகாரிகள் வெவ்வேறு சிறைச்சாலைக்கு கொண்டு போய் அவர்களை அடித்து துன்புறுத்தி தவறுதலான வாக்குமூலங்கள் வாங்கியிருப்பதாகத் தெரிகிறது விசாரணை யில்லாமலேயே குற்றவாளியென்று என்னை கோர்ட்டார் தீர்மானித்தால் அக்குற்றத்தை நானே ஏற்றுக் கொள்கிறேன்.

நீதிபதி:— அப்படி அடிபட்ட குற்றவாளிகள் யார் ? எழுந்திருக்கலாம்.

உடனே மவுங்கோ, தூகா, மொவுன்ஜீ, யான்ஜி அவுங் என்ற நான்கு பேரும் எழுந்து, தங்களை இன்சீன் ஜெயிலிலிருந்து பராஸ்டிரீட் லாக்கப்பில் கொண்டுபோய் மூன்று நாட்கள் வைத்திருந்து, மறுபடி சவுட்டா போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் போலீஸ் அதிகாரிகள் அடித்துத் துன்புறுத்தியதாக தெரிவித்தார்கள்.

நீதிபதி:—கவர்ன்மெண்ட், அட்வகேட் கேட்டுக்கொண்ட இக்கோர்ட்டார் படி இவ்வழக்கை 15-10-47 புதன்கிழமை யன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்வார்கள்.

பிரதம நீதிபதி மேற்கூறியவாறு தெரிவித்து மறு விசாரணையை 15-10-47 வரை ஒத்தி வைத்தார்.

பகல் 12-மணிக்கு இன்றைய தின விசாரணை முடிவுற்றது.

15-10-47-ல் இன்சீன் ஜெயிலில் மந்திரிமார்கள் கொலை வழக்கு சம்பந்தமாக இரண்டாவது நாள் விசாரணை ஆரம்பமாகியது.

(தொடரும்)

ஊடுருவி, மதுரை

இலக்கியம், இலக்கியம் என்று ஓயாமல் இலக்கியத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறீர்களே! இதற்கு பதில் சொல்லிவிடுங்களய்யா பார்க் கலாம்? புறநானூறு, குறள், சிலப் பதிகாரம், மணிமேகலை *இந்நான்கு நூல்களில் வரும் நான்கு பாடல் களின் நான்கு கருத்துக்கள் அதே கருத்தில் நான்கு வேறு பாடல்க ளாக நான்கு இடத்தில் ஒரே நூலில் வருகிறது. அந்த நூலின் பெயர் என்ன? ஆசிரியர் யார்?*

புறம்

“ தீநீர்ப் பெருங்குண்டு சுனை
பூத்த குவளை கூம்பவிழ்
முழுநெறி...உப்பொழுகை
எண்ணுப மாதோ! (116)

குறள்

படைகுடிகூழ் அமைச்சு நட்ப
ரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”
(அதி. 39. 1 செய்

சிலம்பு

துணைபுண ரன்னத்தூ வியிற்
செறித்த
இணையணை மேம்படத் திருந்
துயில் பெறுஅது”
(அந்திமாலை சிறப்பு 66—7வரி)

மணிமேகலை

“ சிறையுமுண்டோ செழும்
புனல்மிக்குழி
(காதை. 5. வரி 19)

முறையே தரப்பட்டுள்ள பாடல்க ளின் கருத்துக்கள்.

“ சூட்டுடைச் சேவல் சுரைக்
கொடி படர்ந்த அவ்வீட்
டுச்சியின்மேல் வீம்பாய்
நடந்துபின்”

என்று 46-வது பக்கத்தில் 12-வது வரியிலும்,

அரசர்க்கு அமைச்சர் அவயம்
அலரோ?

என்று 41-ம் பக்கத்தில் 312-வது வரியிலும்.

‘ துணைபுண ரன்னத் தூவி
யனை மிசைக்கண்டு படுமெல்லை

என்று 18-வது பக்கத்தில் 157வது வரியிலும்,

“ செறித்திடுஞ் சிறையினை
உடைத்திடும்புனல்போல்’

என்று 57-வது பக்கத்தில் 26-வது வரியிலும் முறையே கையாளப் பட்டிருக்கிறது. அந்த நூலின் பெயர் ‘மனோன்மணியம். அதன் ஆசிரியர் சுந்திரம்பிள்ளை. நல்ல சோதனையய்யா! உண்மையிலேயே நீங்கள் இலக்கியத்தை ‘ஊடுருவி’ கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.

எம். பழனிசாமி. திருச்சி

கவிதை என்பது யாது? இதைப் பற்றி அறிஞர்கள் கருத்து என்ன?

உயிர் உணர்ச்சிகளின் சுழலே கவிதை : அரும்பிடும் கருத்துக் களை மாலையாக்கிக் காட்டுகிறான் கவிஞன். கலைகளின் மூத்த கலை தாய்க் கலை; கவிதைக்கலை. என்பது அறிஞர்களின் கருத்து.

ப. நடராசன். சென்னை 20

ஐம்பெருங்குழு — எண்பேராயம் இந்த இரண்டு வார்த்தைகளின் பொருள் என்ன?

ஐம்பெருங் குழு : அமைச்சர், நூல் வல்லார், அணித்தலைவர் ஒற்றர்-சாரணர் முதலிய அரசியல் தலைவர்கள் அடங்கிய ஒரு குழு.

எண்பேராயம் : அரசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டஎட்டு பெருந் துணைவர் களைக் கொண்ட குழு : பண்டைய தமிழரசர் இந்த இரு குழுவின் முடிவு படியே அர சியலை நடத்தினர்.

ப. நடராசன். ஈரோடு

நான் வாழ்க்கையைத் தென்றல் என்கிறேன். என் நண்பர் சூறு வளி என்கிறார் எது உண்மை?

இரண்டுமே தவறு! வாழ்க்கை தென்றலும் அல்ல.- சூறுவளியும் அல்ல. இரண்டும் கலந்த ஒன்று!

ஆரங்கநாதன். கோவை

சங்கத் தமிழின் சிறப்பென்ன?

‘அகம்’ என்றும் ‘புறம்’ என்றும் பிரிந்துப் பேசுவதே ஒரு சிறப்பு தான்.

பத்பநாபன். நெல்லை

சேர-சோழ-பாண்டியர் என்னும் பெயர்கள் என் வந்தது: விளக்குக?

சேர-சோழ-பாண்டியன் என்பது அந்தந்த குடியில் பிறந்தாரை குறிக்கும் குடிப் பெயராகும்- இவற்றை ”குடிபெயராவன கூறுங் காலைச் சேரன் - சோழன் - பாண் டியன் என்றிப் போல் வன பிறவும் பொருத்தங் கொளலே”

என்ற பன்னிரு பாட்டியல், சொல் லியல், விளக்கும்’

வேலாயுதம், திருப்பத்தூர்

தென்றலாரே! புரட்சி இலக்கியம் என்றால் என்ன ஐயா?

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்வோரின் எண்ணப் பிரதி பலிப்பு. அந்த ‘பெரும்பாலோர்’ வடிக்கும் ரத்தக்கண்ணீரின் எழுத் துக் கோர்வை ஐயா!

தோல்காப்பியன், குடியேற்றம்

இலக்கியத்தில் ‘தொகாநிலை’ என்றால் என்ன?

வினைமுற்று, ஈரெச்சங்கள், எழு வாய், விளி, இரண்டு,முதலிய ஆறு உருபுகள் விரிந்து நிற்பன.

லிங்கநாதன், பிரம்பை

கம்பராமாயணத்தை காமக் களஞ்சியம் என்று கூறும் அண்ணு துரை ‘குமரிக்கோட்டம், ரோமாபுரி ராணிகள்’ எழுதுதல் நீதியாமோ?

ரோமாபுரி இராணிகளை தேவ காதை என்றோ குமரிக்கோட்டத்தை கடவுளரின் வாழ்க்கைச் சரித மென்றோ அண்ணு கூறவில்லையே!

சே. து. வேங்கடேசலு

விதி! சிறு விளக்கம் தருக!

பதில் சொல்லமுடியாமல் தவிப் போர் பக்கத்துணைக்கு அழைக்கும் சோம்பேறித் தத்துவம்! ஏமாற்றுக் காரர்களின் தொழிலுக்கு உருவ மில்லாத மூலதனமும் அதுதான்!

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாரப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

— கண்ணதாசன்

தென்னாடு

உலகத்தின் திலகம் தென்னாடு. இந்த எழில்மிக்க நன்னாட்டின் தொன்மை மிக்க வரலாற்றை அன்றுமுதல் இன்றுவரை பல வர லாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ள னர். உலகநாடுகளுடன் தென் னாட்டை ஒப்பிட்டு நோக்குங்கால்; ஒவ்வொரு நூற்றாண்டின்போதும் தென்னாடு மற்ற நாடுகளைக் காட்டி லும் கலாச்சாரத்தில்-பண்பாட்டில்-நாகரீகத்தில்-வளத்தில் மேம்பட்டு இருத்தலையே காண்கிறோம். தென் நாட்டின் முழுவரலாறு இதுவரை யில் தொடர்ச்சியாக எழுதப்பட வில்லை. எனினும் இக்கால புதை பொருள் ஆராய்ச்சிகளால் தென் னகத்தின் நாகரீகம் படிப்படியாக விளங்கி வருகிறது. உலகிற்கு கலை தந்தது கிரேக்க நாகரீகம் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அந்த கிரேக்க நாகரீகத்தைவிட தென்னாட்டின்நாகரீகம்தொன்மை வாய்ந்தது. இமயம் தோன்றி பல ஆயிரம் ஆண்டுக்கு முன் பாகவே தென்நிலம் பண்பட்டு இருந்தது, வளமிக்க இந்த தென் னாட்டின் வரலாற்றை பல்சான் றுடன் துருவி-ஆராய்ந்து விளக்கி இருக்கிறார் பன்மொழி கற்றவரும். குன்றென பல நூற்களை இலக்கிய உலகிற்கு தந்தவரும்-தந்துகொண் டிருப்பவருமான அறிஞர் அப்பா துரை M.A.L.T., M.O.L. அவர்கள் தாயகத்தின் வரலாறு தெரிந்து கொள்ள இந்த ‘தென்னாடு’ ஒவ் வொருவர் கையிலும் - குறிப்பாக மாணவமணிகளிடத்திலும் இருக்க வேண்டிய நூல். இந்த அரிய நூலை அழகான முறையில் வெளி யிட்ட ‘மலர் நிலையத்தார்’ தென் னகத்தின் பாராட்டுதலுக் குரிய வர்கள்.

கிடைக்குமிடம்
மலர் நிலையம்
133, பிராட்வே, சென்னை-1
விலை. ரூபா. 2

◉

அற்புத ஆயுதம்

‘படியாய்க் கிடந்து உன் பவள வாய்க் காண்பேனே? இப்படிப் பாடுவாராம் அந்த பேரழகியைக் கண்டோர். வண்ணங்கள் விளை யாடும் அவள் கன்னத்தின் தரி சனத்திற்காக காவலர் பலர் அவள் காலடியில் காத்துக்கிடந்தனர். வாள் வல்லோர் பலரை தாள்பணி யச் செய்த ஈஜிப்ட்டின் எழிலரசி கண்டாரைக் கொல்லும் கட்டழகி யாம். ‘கிளியோபாட்ராவின்’ இன்ப வாழ்வை—எழுத்தோவிய மாக்கியிருக்கிறார் நண்பர் பா. உ. சண்முகம். அழகான முகப்பு. அருவியென நடைபோடும்எழுத்து. எழுத்துக்கு எழுத்து இனிப்பு. படித்துப் பாருங்கள்! மிகையல்ல என்பீர்கள்.

வெளியிட்டோர்:
இராணி பதிப்பகம்
திருவண்ணாமலை
விலை. 0—12—

இலக்கியத்தில் காதல்

பண்டைத் தமிழிலக்கியங்கள் பல வற்றுள் அகத்துறை சம்பவங்கள் எழில் மிக்க கவிதைகளாக ஆக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் சில பல இலக்கியங்களில் இருக்கும் காதல்காட்சிகளை - அள்ளிச்சேர்த்து சொல்லோ வியங்களாக—தனக்கே உரித்தான தனித் தமிழ்நடையில் தீட்டியுள்ளார் காரைமுத்துப்புல வர். அருமையான காதற் பூங்கா இலக்கியச் சோலை; தென்றலில் தவழ்ந்தது. நுழைந்துவிட்டால் இன்றெல்லாம் சுவைக்கலாம் இன்பம் கொள்ளை! கொள்ளை மிகையல்ல! படித்தால் தெரியும்.

விபரங்களுக்கு!
அருணோதயம்
5, தம்பைய செட்டி தெரு
மேற்கு மாம்பலம். சென்னை-15
விலை. 1—4—0

மானங்காத்த மருது பாண்டியன்

வரலாற்று நூல்கள் வகைவகை யாக வரத் தொடங்கிவிட்ட இந்த நாளிலே தமிழகத்துவிடுதலைக்காக போராடிய வீரத் திருமகன் மருது பாண்டியன் வரலாற்றை நல்ல தமிழிலே ஆக்கித் தந்துள்ளார் தோழர் ந. சஞ்சீவி அவர்கள்.

வெளியிட்டோர்:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1
விலை ரூ. 1—8—0

திருச்சி விசுவநாதம்

செந்தமிழைச் சுவைப் பிழம்பை ஒன்றாய்க்கூட்டி—தெள்ளு தமிழ் வார்த்தைகளை அள்ளிவீசி - வள்ளு வரின் குறள்தனையே எடுத்துக் காட்டி - வைகையான பல சுவை யைக் கூட்டிச் சேர்த்துத் தமிழ் நாட் டின் மூலையெலாம் தமதறிய இன் சொல்லால் - எளிய சொல்லால் மக் கள் உள்ளமெலாம் கொள்ளை கொண்ட தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் என்றால் மிகையல்ல. இத்தனை சிறப்புடைய ஒருவரின் வாழ்க்கைவரலாற்றினைத் தொகுத் துத் தந்துள்ளார் தோழர். மா. சு. சம்மந்தன்அவர்கள். அவரைப் பாராட்டுகிறோம். தமிழர் அனைவ ரும்படிக்கவேண்டிய நூல்.

வெளியட்டோர்
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1
விலை ரூபா. 1—4—0

(அடுத்த இதழிலும் ‘நூல்நயம்’ இடம் பெறும்.)

கவிஞரும் தத்துவமும்

அது ஒரு தீவு.

தென்னஞ்சோலை — செடி கொடிகள் — சுழன்றடிக்கும் காற்று—பறவைகளின் சப்தம் இதைத்தவிர வேறு நாதியே இல்லாத அனாதிப் பூமி அது.

அதற்கும் பெயர் இல்லை. எந்த அரசாங்கத்துக்கும் அதன்மீது உரிமை இல்லை. அதை விற்போரில்லை; ஆகவே வாங்குவோரில்லை!

மனிதனின் காலடிபடாத பூமி அது! அந்தத் தீவிலே ஒரு நாள்...

வடக்கேயிருந்து ஒரு படகு வந்தது. அதில் ஒரே ஒரு மனிதன் வந்தான். பிரக்ஞை இல்லாத அந்த மனிதன், தூங்கியபடியே படகைவிட்டு இறங்கினான். முதல் மனிதனின் காலடி அந்தப் பூமியிலே பட்டு விட்டது!

தெற்கே இருந்து ஒரு படகு...

அதிலும் ஒரு மனிதன் வந்தான். அவனும் அந்தப் பூமியிலே இறங்கினான்.

கிழக்கிலிருந்து ஒரு படகு வந்தது. அதில் மூன்றுபேர் இருந்தார்கள். ஒருவன் மட்டுமே அதில் ஆடவன்! மேற்குப் படகில் ஒரு இளைஞன் வந்தான். ஆறுபேர்—அந்தத் தீவில்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்; விழித்தார்கள். அறிமுகம் நடந்தது. வடக்கிலிருந்து வந்தவன் சொன்னான். "நான் ஒரு கவிஞன். என் பெயர் மாயாண்டி. புனை பெயர் மாயக் கவி. நான் நிறையக் கவிதைகள் எழுதியிருக்கிறேன். உலகம் என் புகழை ஓயாமல் பாடுகிறது. என் கவிதைகளைப் படித்த உலகமக்கள் வேதாந்தத்தின் பெருமையைப் பாடிக் கொண்டே இருக்கிறார்கள்.

தெற்கிலிருந்து வந்தவன் அவனை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டுச் சொன்னான். "நானும் ஒரு கவிஞன் தான். அதுவும் மகாகவி. தலை சிறந்த விமர்சகன். ஏழை மக்களின் ரத்தத்திலே என் கவி கலந்து பணக்காரரின் சித்தத்திலே பயங்கரமாகத் தோன்றிற்று. புரட்சி! வர்க்கப் புரட்சி! அலறி அழுகிறது சமுதாயம்! பட்டபாடு வீணாகுமா! அவன் சிரித்தான்.

அவன் சிரித்த சிரிப்பு—அதுவே ஒரு புரட்சி!

கிழக்கிலிருந்து வந்தவர்களில் ஆடவன் சொன்னான், "மாங்கனியைப் பிளந்தது போல் நிறம் படைத்த ஏ! தோழர்களே! நான் யார் தெரியுமா? கலைஞன் — கவிஞன் — என்னுடைய கற்பனைகளில் வேதாந்தம் இருக்காது-புரட்சி இருக்காது. வாழ்க்கை வாழ்வதற்கே! மது! மாது! இவையே உலகம் என்கிற தத்துவம் என் உயிரோடு பிறந்தது பெண்ணால்தான் நாம் இந்தப் பூமியில் விழுந்தோம்! பெண்! அந்தக் குலத்துக்குப் பெருமை வேண்டும்! ஒன்றுக்கு இரண்டாகப் பக்கத்தில் இருக்கவேண்டும்! இதோ இவர்கள் என் காதலியர்! கலை! கவிதை! கலை, மனிதனின் உள்ளத்திலே உருக்கி எடுக்கப்படும்போது கவிதையாகவேண்டும்! நான்......!

அவன் பேசிக் கொண்டே போவான் போல தோன்றிற்று.

மேற்குப் படகில் வந்தவன் இடைமறித்துப் பேசினான் 'பரிதாபத்திற்குரிய என் தோழர்களே! நானும் கவிஞன் தான்"

அவன் இப்படிச் சொன்னதும் அந்த மூன்று கவிஞர்களும் 'ஓ' என்று அழுதார்கள். அழுதார்கள் - அழுதார்கள் - நிறுத்தாமல் அழுதார்கள்! பெண்கள் இருவரும் தலையில் கையைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். மேற்குக் கவிக்கு ஒரே குழப்பம்! ஏன் அழுகிறார்கள்? புரியவில்லை. கடவுள் பிரச்னையில், ஆஸ்திகன் முழிக்கிற மாதிரி, அவன் முழித்தான், அழுகையை நிறுத்தப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியில் அழுகை ஓய்ந்தது.

மேற்குக் கவி கேட்டான்: "ஏன் அழுதீர்கள்?"

திக்கித் திணறி கிழக்குக் கவி சொன்னான்: "நாங்கள் மூவரும் கவிஞர்கள் என்று முடிவானவுடனே, இந்த அனாதித் தீவில் நீ ஒரு ரசிகனாக வந்திருப்பாய் என்று நினைத்தேன். நீயும் கவிஞனானால் என் கவிதையை ரசிப்பதற்கு யார் இருக்கிறார்கள் என்று நினைத்தேன்; அழுகை வந்து விட்டது"

தெற்குக் கவியும் வடக்குக் கவியும் தலையை ஆட்டி அதை ஆமோதித்து விட்டு 'ஒப்பாரி' நடத்தினார்கள்.

மேற்குக் கவி யோசித்தான்; உண்மைதான் என்று பட்டது.

மேற்குக் கவி சொன்னான்.. ஆம், விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான். '...என் கவிகளில் வேதாந்தம் இருக்கும். தத்துவம் இருக்கும், புரட்சி இருக்கும்; அழகு ... காதல் இருக்கும். எல்லாம் வாழ்க்கைக்குத் தேவையாய் இருக்கும். எனக்கு செல்வாக்கிலே ஆசை இல்லை. ஆகவே என் கவிதை எந்த உலகம் வரை எட்டியிருக்கிறது என்று கணக்குப் பார்க்கவில்லை...

அவன் மெல்ல சிரித்து விட்டு தரையில் உட்கார்ந்தான்; மண்ணைக் கிளறிக் கிளறி வேடிக்கை காட்டினான்.

வேதாந்தக் கவி ஆத்திரமாக நடந்து அவன் பக்கம் வந்தான்.

"உலகம் பொய்! வாழ்வு மாயம்! இது வேதாந்தம்! உன் கவிதைகளிலே வேதாந்தம் இருந்தால் மாய வாழ்வை உண்டாக்கும் அழகு இருக்கக் கூடாது; முடியாது. இரண்டும் உன் கவிதைகளில் இருப்பதாக நீ கூறுகிறாய். எப்படி முடியும்?"

மேற்குக் கவி சொன்னான் --- அமைதியாக, 'வேதாந்தம் பாடுகிறேன் நான். அழகையும் காதலையும் பாடுகிறேன் நான். நானும் பெண்ணை மாயம் என்கிறேன். ஆனால் ஒரு பேதம். நீ எல்லாப் பெண்ணையும் மாயம் என்கிறாய். நான், "வாழ்வுக்கு ஒரு மனைவியைக் கொள். பாக்கிப் பெண்களை மாயமாகக் கருது என்றேன். அந்த ஒரு மனைவியிடம் காதல் கொள்ளச்சொல்கிறேன். அங்கே உன்னுடைய வேதாந்தம் திரிந்து காதலோடு இணைந்து வாழ்கிறது!"

"நீ ஒரு மடையன்!" காதல் கவி கத்தினான்! மேற்குக் கவி திரும்பிப் பார்த்தான்! வேதாந்தக் கவி, காதல் கவி என்ன சொல்லப் போகிறான் என்று எதிர் பார்த்தான்.

காதல் கவி சொன்னான். "ஒரே ஒரு மனைவி! மேற்குக் கவியே, என் மதிப்புக் குரிய மடையனே! ஒரு மனைவி தத்துவம் உப்புச் சப்பற்றது. தினம் ஒரே வேட்டியா உடுத்துகிறோம்? தினம் ஒரே உணவா சாப்பிடுகிறோம்? அழகிகள் பலரகம், ரகம் பிரித்து அனுபவிக்கவேண்டும்! மது! வாந்தி வரும் வரை குடிக்க வேண்டும்! என்றாவது ஒரு நாள் நாம் செத்து விடுவோம்! அதற்குள் எல்லாம் அனுபவிக்க வேண்டும் ஆணைப்படைத்துப் பெண்ணையும் படைத்தவன், ஒருவனுக்கு ஒருத்தி தான் மனைவி என்றால் இன்னாருக்கு இவள் மனைவி என்று எழுதி அனுப்பியிருப்பான்! ஊரெல்லாம் மனைவி, ஆறெல்லாம் மது! யாரும் யாரோடு வேண்டுமானாலும் சேரலாம்! இதுவே பிறப்பின் தத்துவம்"

காதல் கவி இரண்டு பெண்களையும் பக்கத்தில் அழைத்தான். சிவப்பாக இருந்த ஒருத்தி மட்டும் பக்கத்தில் வந்தாள். 'இச்' என்றோர் ஒலி இருவரிடமும் பிறகு பேசினாள்.

"செம்பவள வாயில் ஒரு முத்தம்! உதடு துடிக்கிறது; உள்ளம் துடிக்கிறது! காதல்! அதுமட்டும் இல்லையானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் படைப்பில் பேதமே தேவையில்லை."

"பளார்!" என்று ஒரு அறை காதல் கவியின் கன்னத்தில் விழுந்தது. வேதாந்தக் கவி நெருப்பாக நின்றான்.

"சண்டாளப் பதரே! ஒரு மனைவியே கூடாது என்கிறேன் நான். நீ ஊரெல்லாம் மனைவி என்கிறாய்- ஆண்டவன் காதுக்கு இது எட்டினால் என்ன நினைப்பான்? அன்னை பார்வதிதான் என்ன நினைப்பாள்!" இந்த இடத்தில் வேதாந்தக் கவி திணறினான். புரிந்துகொண்ட காதல் கவி கேட்டான்.

"உன் ஆண்டவன்தான் என்ன வாழ்கிறான். பார்வதியை என்ன எழவுக்கு மணம் முடித்தான். அவன் மட்டும் காமக்கூத்தாடல்லாமோ?"

கண்ணதாசன்

(3-ம் பக்கம் பார்க்க)